# “மனிதன் எதை விதைக்கின்றானோ”

## (2 சாமுவேல் 11-16; 18)

அண்டத்தின் அமைவுப் பின்னலைக் கட்டியெழுப்பிய கொள்கை களுக்குள், கலாத்தியர் 6:7, 8ல் ஒரு கொள்கை விவரிக்கப்படுகின்றது:

> மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ண வொட்டார், மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்.

நீங்கள் என்ன செய்வீர்கள் என்பதை நம்புங்கள்; நீங்கள் விதைத்தால், நீங்கள் அறுப்பீர்கள். நீங்கள் (விதைத்த) வகையையே அறுப்பீர்கள், நீங்கள் விதைத்தவற்றிற்கும் அதிகமானவற்றை அறுப்பீர்கள். இவைகள் விதைத்தல் மற்றும் அறுத்தல் ஆகியவற்றின் விதிகளாக உள்ளன - நாம் விதைத்த பின்பு, வளரும் செயல்முறையை நிறுத்தும்படிக்கு நாம் எதையும் செய்ய முடியாது. அது (வளர்தல்) தவிர்க்க முடியாததாக உள்ளது. ‘‘மனிதன் எதை விதைக்கின்றானோ, அதையே அறுப்பான்.’’ ஒரு எழுத்தாளர் கூறியபடி, “மன்னிப்பு என்பது ஈடுகொடுத்து நிற்பதில்லை.”

சில வேளைகளில் “நான் வருந்துகின்றேன்” என்பதே நமது பிள்ளைகள் கூற வேண்டிய எல்லாமுமாக உள்ளது, அதன் பிறகு எல்லாம் சரியாகிவிடும் என்ற மனப்பதிவை அவர்களிடத்தில் நாம் விட்டுவைக்கின்றோம். அல்லது, அவர்கள் பெரியவர்களாகின்றபோது, கர்த்தரிடத்தில் அவர்கள் ‘‘நான் வருந்துகின்றேன்’’ என்று கூறவேண்டியதே எல்லாமுமாக உள்ளது, அப்பொழுது அவர்களின் பாவம் ஒருக்காலம் செய்யப்படவில்லை என்பது போன்ற நிலை ஏற்படுகின்றது என்பது போன்ற மனப்பதிவை அவர்களுக்குள் ஏற்படுத்துகின்றோம். அல்லது, அது “உண்மையிலேயே ஒரு மோசமான பாவமாக” இருந்தால், அவர்கள் (சபையில் ஞானஸ்நானம் பெறும்படி விடுக்கப்படும்) அழைப்பு ஒன்றுக்குப் பதில்செயல் செய்து, சபையாரிடத்தில் “நான் வருந்துகின்றேன்” என்று கூறலாம், அதன்பிறகு பின் விளைவுகள் ஒன்றும் இராது என்ற மனப்பதிவை ஏற்படுத்துகின்றோம். நீங்கள் பாவம் செய்தால் - மன்னிப்பு என்பது ஈடுகொடுத்து நிற்பதில்லை - விளைவுகள் ஏற்படுகின்றன என்பதை நமது பிள்ளைகளிடத்தில் கூறத் தவறிவிடுகின்றோம். இரவில் உறங்குவது கடினமாயிருப்பதை நீங்கள்

*காண்பீர்கள். மக்கள் உங்களை நம்ப மாட்டார்கள். அறுவடை ஒன்று இருக்கும்.*

*என் அலுவலகத்தில் மக்கள் அடிக்கடி, "இது நியாயமாயிருக்கவில்லை! நான் வருந்துகின்றேன் என்று என் துணைவரிடம்/துணைவியிடம் கூறினேன். ஆனால் அவர்/அவள் இன்னும் என்னை நம்புவதில்லை!" என்று கூறுகின்றார்கள். அல்லது, "நான் என் பாவங்களை அறிக்கையிட்டு சபையார் எனக்காக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டேன். ஆனால் சிலர் இன்னும் என்னை ஏற்றுக் கொள்வது இல்லை. இது நியாயமல்ல!" என்று கூறுகின்றார்கள். நான் அவர்களுக்கு, "மனிதன் எதை விதைக்கின்றானோ, அதை அறுக்கவும் செய்வான்" என்று மீண்டும் மீண்டும் நினைவுபடுத்த வேண்டியிருந்தது - மன்னிப்பு என்பது ஈடுகொடுத்து நிற்பதில்லை.*

*நீங்கள் ஒரு நண்பருடன் தள்ளுமுள்ளு சண்டை செய்து உங்கள் கையொன்றை உடைத்துக் கொண்டிருந்தால், உங்கள் நண்பருடன் ஒப்புரவாகி விட்டபோதிலும், இன்னமும் உங்கள் கை உடைந்ததாகவே இருக்கும். நீங்கள் அதற்குக் கட்டுப் போட வேண்டியிருக்கும். நீங்கள் விதைத்ததை அறுத்தேயாக வேண்டும் - மன்னிப்பு என்பது ஈடுகொடுத்து நிற்பதில்லை.*

*இதற்குத் தாவீதின் வாழ்வைக் காட்டிலும் சிறந்த விவரிப்பு வேறெதுவும் இருப்பதில்லை. நமது முந்திய பாடத்தில் - தாவீது பத்சேபாளுடன் விபசாரம் செய்து, மாய்மால நடிப்பை நடித்து, பத்சேபாளின் கணவரைக் கொல்லுவித்தார் என்ற வகையில் - விதைத்தல் என்பது வலியுறுத்தமாயிருந்தது. அதைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் அறுத்தல் என்பதே இந்தப் பாடத்தில் வலியுறுத்தமாயிருக்கும்.*

## "மனிதன் எதை விதைக்கின்றானோ"
## *(2 சாமுவேல் 11; 12)*

*பின்னணிகள் சிலவற்றைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திப்போம்; பின்பு நாம் தாவீதின் அச்சமூட்டும் அறுவடையின் வரலாற்றுக்குச் செல்லுவோம்.*

*நாம் 2 சாமுவேல் 3க்குப் பின் திரும்புவோம். 2 சாமுவேல் 3ன் காலத்தில், தாவீது யூதா கோத்திரத்தின் மீது மட்டும் அரசாட்சி செய்து கொண்டிருந்தார். எப்ரோன் அவரது தலைநகராயிருந்தது. வசனம் 2ல் நாம், "எப்ரோனிலே தாவீதுக்குப் பிறந்த குமாரர்: யெஸ்ரயேல் ஊராளான அகினோவாமிடத்திலே பிறந்த அம்னோன் அவனுக்கு முதல் பிறந்தவன்." அகினோவாம் அவரது இரண்டாவது மனைவியாயிருந்தாள் (அவரது முதல் மனைவி மீகாளுக்குப் பிள்ளையில்லாதிருந்தது). வசனம் 3ல் நாம், "நாபாலின் மனைவியாக இருந்த அபிகாயிலிடத்திலே பிறந்த கிலேயாப் அவனுடைய இரண்டாம் குமாரன்" என்று வாசிக்கின்றோம். அபிகாயில் தாவீதின் மூன்றாவது மனைவியாயிருந்தாள் (இவளை முட்டாளான நாபாலின் ஞானம் நிறைந்த மனைவி என்ற வகையில் நீங்கள் நினைவில் வைத்திருப்பீர்கள்). வசனம் 3 தொடர்ந்து, "மூன்றாம் குமாரன் கேசூரின் ராஜாவான தல்மாய் குமாரத்தியாகிய மாக்கள் பெற்ற அப்சலோம்*

என்பவன்'' என்று கூறுகின்றது. வசனத்தின் இந்தப் பகுதி, இன்னும் பிரிதொரு மனைவியைக் குறிப்பிடுகிறது: மாக்காள், இவள் சீரியாவின் கேசூரிலிருந்து வந்து புறதெய்வ வணக்கம் கொண்ட இளவரசியாக இருந்தாள். இவளது தந்தை தல்மாயைப் பற்றிக் கவனித்து வைத்துக் கொள்ளுங்கள்; அவரைப் பற்றி நாம் பிற்பாடு அதிகம் கூறுவோம். வசனம் 4, 5ல் நாம் இன்னும் மூன்று மகன்களைப் பற்றி வாசிக்கின்றோம், அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு மனைவியருக்குப் பிறந்தவர்களாயிருந்தார்கள்! தாவீது மனைவிகளைத் திருமணம் செய்துகொண்டு மகன்களைப் பெற்றிருந்தார். இந்த வேளையில் இரண்டு மகன்களை மட்டும் கவனியுங்கள்: முதல் பிறந்த அம்னோன் (வ. 2), மற்றும் மூன்றாவதாகப் பிறந்த அப்சலோம் (வ. 3).

இந்தப் பாடமானது இவர்களில் இரண்டாமவரான அப்சலோமை மையங் கொண்டிருக்கும் என்பதால், அவரைப் பற்றிய பின்னணிகள் சிலவற்றைக் காண்பதற்காக நாம் 2 சாமுவேல் 14க்குச் செல்வோம். வசனங்கள் 25ம் 26ம், அப்சலோமைப் பற்றி வேத வசனத்தில் செருகப்பட்ட வண்ணமயமான விளக்கவுரையாக இருக்கின்றன. வசனம் 25, "இஸ்ரவேலர் அனைவருக்குள்ளும் அப்சலோமைப்போல் சவுந்தரியமுள்ளவனும்[1] மெச்சிக்கொள்ளப்பட்டவனும் இல்லை; உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் அவனில் ஒரு பழுதும் இல்லாதிருந்தது" என்று கூறுகின்றது. (இவ்விதமாக என்னை விவரித்துள்ள ஒரே ஒரு நபர் என் தாயார் மட்டுமே ஆவார்!) அவரைத் தாவீது கண்ணோக்குகையில், "இப்படிப்பட்ட அழகிய வலிவார்ந்த மனிதனை இவ்வுலகிற்குக் கொண்டு வர என்னால் முடிந்தது என்பதை என்னால் நம்ப முடியவில்லையே!'' என்று நினைக்கையில் தாவீதின் இருதயத் துடிப்புச் சற்றே வேகமாயிருக்கும்.

வசனம் 26, ''அவன் [அப்சலோம்] தன் தலைமயிர் தனக்குப் பாரமாயிருப்பதினால் வருஷாந்தரம் சிரைத்துக் கொள்ளுவான்; சிரைக்கும் போது, அவன் தலைமயிர் ராஜாவுடைய நிறையின்படி இருநூறு சேக்கல் நிறையாயிருக்கும்" என்று கூறுகின்றது. இருநூறு சேக்கல் என்பது, ஒன்றரை கிலோவில் இருந்து இரண்டேகால் கிலோ வரையிலான எடைக்குச் சமமானதாகும். இதனுடன் ஒப்பிடுவதற்கு ஒன்றரை கிலோவில் இருந்து இரண்டேகால் கிலோ வரையிலான எடைகொண்ட எதையும் என்னால் கண்டறிய இயலவில்லை, ஆனால் சுமார் ஒரு கிலோ எடையுள்ள மொச்சை அடங்கிய பை ஒன்றை நான் கண்டேன்; அது கனமாயிருந்தது.[2] அப்சலோம் ஏன் முடிவெட்டிக் கொண்டார் என்பதை நான் புரிந்து கொள்கின்றேன், ஆனால் அதை [முடியை] அவர் நிறுத்துப் பார்க்கச் செய்தார் என்பது வினோதமானதாக இல்லையா? நீங்கள் கடைசி முறையாக முடிவெட்டிக் கொண்டபோது, வெட்டப்பட்ட உங்கள் முடியை நிறத்துப் பார்த்தீர்களா? அப்சலோமின் மாயமானப் பண்பு காண்பிக்கப்பட்டது. அவர் தமது அழகிய, அலைபாய்கிற, அண்டக் கறுப்பான, யூத முடி பற்றி பெருமை கொண்டிருந்தார்.

அவர் ஒரு அழகிய இளைஞராயிருந்தார்! அவர் ஒரு குழந்தையாயிருந்த வேளையில், தாவீது அவரைக் கடந்து சென்ற ஒவ்வொரு முறையும், சற்று

*நின்று, அவரது தலையில் செல்லமாகத் தட்டி, "நீ எவ்வளவு அழகுமிக்க பையனாகக் காணப்படுகின்றாய்!" என்று கூறியிருப்பார்.*

*நாம் இன்னும் ஒரு சில ஆண்டுகள் கடந்து செல்வோம். எப்ரோனில் ஏழு ஆண்டுகள் கழிந்த பின்பு, தாவீது எருசலேமைக் கைப்பற்றி அதைத் தமது தலைநகராக்கினார். 2 சாமுவேல் 5:13ல் நாம், "அவன் எப்ரோனி லிருந்து வந்தபின்பு, எருசலேமில் இன்னும் அதிகமான மறுமனையாட்டி களையும்[3] ஸ்திரீகளையும் கொண்டான்; [இவர்களில் நாம் குறைந்தபட்சம் பத்துப் பேர்களைப் பற்றி அறிகின்றோம்.[4]] இன்னும் அதிக குமாரரும் குமாரத்திகளும் தாவீதுக்குப் பிறந்தார்கள்" என்று வாசிக்கின்றோம். வசனம் 14 முதல் 16 முடிய உள்ள பகுதி, இன்னும் பதினோரு மகன்களைப் பட்டிய லிடுகிறது. தாவீதின் குடும்ப மரம் மிகவும் கனத்தது - அதன் கனிகளில் சில அழுகிய நிலைக்கு ஆரம்பமானது.*

*முந்திய பாடங்களில் நாம், தாவீதை ராஜா என்ற வகையில் அவரது தொடக்க நாட்களின் வெற்றியை - ஒரு வெற்றிகரமான போர்வீரர், ஒரு ஞானமிக்க நாட்டுப்பற்றாளர், ஒரு மதிநுட்பமான ஒருங்கமைப்பாளர், கர்த்தரை வைராக்கியத்துடன் ஆராதிப்பவர் என்ற வகையில் கூட - கண்டுள்ளோம். தாவீதை ஒரு குடும்பஸ்தர் என்ற வகையில் நாம் இன்னும் காணவில்லை. அவர் [பல] பெண்களைத் திருமணம் செய்துகொள்ளவும், பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளவும் நேரம் கொண்டிருந்தார்; [ஆனால்] அந்தப் பிள்ளைகளை உருவாக்கவும் வடிவமைக்கவும் அவருக்கு நேரம் இருக்கவில்லை.*

*கடைசியாக. 2 சாமுவேல் 11ல், தாவீதுக்கு சற்றே ஓய்வு நேரம் வாய்த்தது. அந்த நேரத்தில் அவர் தமது குடும்பத்துடன் இருப்பதற்குப் பதிலாக, குளித்துக் கொண்டிருந்த அழகிய பெண்ணொருத்தியைக் காணும் வரைக்கும் சலிப்புற்றவராய் சுற்றித் திரிந்து கொண்டிருந்தார். அவளுடன் விபசாரம் செய்த பின்பு, பாவத்தின்மேல் பாவமாகக் குவிந்தது. அது ஒரே ஒரு பிற்பகல் வேளையாக, கர்த்தருக்குத் தமது வாழ்வு முழுவதையும் ஒப்புக் கொடுத்திருந்த ஒரு மனிதர் தமது வாழ்நாளில் இச்சையடக்கம் இன்றி யிருந்த ஒரே ஒரு மாலை வேளையாகத்தான் இருந்தது. "மனிதன் எதை விதைக்கின்றானோ, அதையே அறுப்பான்'' என்பது உண்மையாக உள்ளதா? அவர் அறுத்ததும் அதே வகையானது என்பது உண்மையாக உள்ளதா? அவர் விதைத்ததை விட அதிகமானவற்றை அறுத்தார் என்பது உண்மையாக உள்ளதா? நாம் இவ்வரலாற்றைத் தொடருவோம்.*

*நமது முந்திய பாடத்தில், தாவீதிடத்தில் நாத்தான், "நீயே அந்த மனு ஷன்!'' (2 சாமு 12:7) என்று கூறிய நாடக பணியிலான காட்சியைக் கண்டோம். தாவீது, "நான் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தேன்!" (2 சாமு. 12:13அ) என்று கதறுகையில் அவரது மனஸ்தாபத்தைக் கண்டோம். நாம் சங்கீதம் 51ல், தாவீதின் பெருந்துயரின் ஆழத்தையும், பின்பு நாத்தான் அவரிடத்தில் "நீ சாகாதபடிக்கு, கர்த்தர் உன் பாவம் நீங்கச் செய்தார்" (2 சாமு. 12:13ஆ) என்று உறுதிப்படுத்திய வேளையில், சங்கீதம் 32ல் அவரது [தாவீதின்] இருயத்தில் ஏற்பட்டிருந்த மகிழ்வைக் கண்டோம். பழைய ஏற்பாட்டில் கூட தேவனுடைய கிருபைத் தன்மையைக் காண்பது*

*ஆச்சரியமாக உள்ளதல்லவா? "நீ மரிப்பதில்லை. நீ - நியாயப்பிரமாணத்தின் கீழ், விபசாரம் மற்றும் கொலை ஆகியவற்றிற்கான தண்டனை என்ற வகையின்படி - கல்லெறியப்பட்டுக் கொலை செய்யப்பட மாட்டாய். நீ உயிர் வாழப் போகின்றாய்!'' தாவீதின் வாயிலிருந்த வந்தது ஐந்து வார்த்தைகள்: "நான் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்தேன்." அத்துடன் தாவீது அந்த விஷயத்தைக் கவனித்திருந்[முடித்திருந்]தார். அவருக்குப் பிரச்சனைகள் இல்லாதிருந்தது. ஒவ்வொரு விஷயமும் முன்பு இருந்தது போலவே ஆயிற்று.*

*இல்லை.*

*ஏதொன்றும் முன்பு இருந்தது போலாகவில்லை.*

*"மனிதன் எதை விதைக்கின்றானோ, அதையே அறுப்பான்" - மன்னிப்பு என்பது ஈடுகொடுத்து நிற்பதில்லை.*

## *"அதையே அறுப்பான்"*
## *(2 சாமுவேல் 12-19)*

*12:10ல் தாவீதுக்கு நாத்தான் கூறிய வார்த்தைகளைக் கவனியுங்கள்: "பட்டயம் என்றைக்கும் உன் வீட்டை விட்டு விலகாதிருக்கும்." 12:11ல் திட்டவட்டமான உதாரணத்தைக் கவனியுங்கள்: "கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், இதோ, நான் உன் வீட்டிலே பொல்லாப்பை உன்மேல் எழும்பப்பண்ணி, உன் கண்கள் பார்க்க, உன் ஸ்திரீகளை எடுத்து, உனக்கு அடுத்தவனுக்குக் கொடுப்பேன்; அவன் இந்தச் சூரியனுடைய வெளிச்சத் திலே உன் ஸ்திரீகளோடே சயனிப்பான்."*

*தாவீதின் பதிலை நான் ஏறக்குறைய கேட்க முடிகின்றது: "ஒரு நிமிடம் பொறும் கர்த்தாவே. இது நியாயமானதல்லவே! நான் மன்னிக்கப்பட்ட நபராயிருக்கின்றேன். நான் அந்த மாய வார்த்தைகளைக் கூறியுள்ளேன். நான் எதைச் செய்ய வேண்டுமோ, அதைச் செய்திருக்கின்றேன். 'பட்டயம் என்றைக்கும் உன் வீட்டை விட்டு விலகாதிருக்கும்' என்று நீர் கூறுவதன் அர்த்தம் என்ன?"*

*"நான் எதைக் கூறினேனோ, அதையே அர்த்தப்படுத்துகின்றேன். மனிதன் எதை விதைக்கின்றானோ, அதையே அறுப்பான் - மன்னிப்பு என்பது ஈடுகொடுத்து நிற்பதில்லை."*

*பாவத்தின் குற்ற உணர்வு நீக்கப்பட்ட போதிலும் கூட, அதன் விளைவுகள் இன்னும் தாமதித்து நிற்கின்றன. பாவம் பற்றிய அந்த விஷயத்தை நாம் புரிந்து கொண்டுள்ளோமா? பாவம் என்பது இலேசான விஷயமாயிருப்பதில்லை. நாம், "இதைப் பற்றிக் கவலைப்பட ஒன்று மில்லை. இதைப் பற்றி ஒரு கண நேரத்தில் நான் கவனம் செலுத்தி விட முடியும்'' என்று கூற முடியாது. அது தாவீதின் பத்தாயிரக் கணக்கான நாட்களில் ஒரே ஒரு மாலைப் பொழுதாக மட்டுமே இருந்தது, ஒரே ஒரு மாலைப் பொழுதுதான் - ஆனால் அதன் விளைவானது ஆண்டுக்குப் பின் ஆண்டாக பல ஆண்டுகள் தொடர்ந்து தாமதித்து இருந்தது.*

*12:10ல் உள்ள "வீட்டை விட்டு" என்ற வார்த்தையையும், 12:11ல் உள்ள*

*“வீட்டிலே” என்ற வார்த்தையையும் கவனியுங்கள்: “பட்டயம் என்றைக்கும் உன் வீட்டை விட்டு விலகாதிருக்கும் ... நான் உன் வீட்டிலே பொல்லாப்பை உன்மேல் எழும்பப் பண்ணி.” வீட்டிற்கு எதிராக நிலையான தாக்குதல்கள் வந்தன. சில புயல்கள் வெளியிலிருந்து வந்தன; வீடானது இருக்க வேண்டிய வகையில் இருந்திருந்தால் இந்தப் புயல்களை எதிர்த்து உறுதியாக நின்றிருக்க முடிந்திருக்கும். இல்லங்களை அழிக்கின்ற புயல்கள் உள்ளிருந்தே வருகின்றவைகளாக இருக்கின்றன. தாவீதின் பாவத்தினிமித்தமாக, அவரது வீட்டார் உள்ளிருந்தே வீசிய புயலினால் ஒன்றன் பின் ஒன்றாக சிதைக்கப்பட்டார்கள்.*

*இவற்றில் முதல் விளைவை நாம் முந்திய பாடத்தில் கண்டோம்: தாவீதுக்கும் பத்சேபாளுக்கும் ஏற்பட்டிருந்த சட்டவிரோதமான உறவின் காரணமாகப் பிறந்த மகனின் கவலைக்குரிய மரணம். தொடர்ந்து ஏற்பட்ட [மோசமான] விளைவுகளைக் காண்பதற்கு நாம் 2 சாமுவேல் 13க்கு இப்போது திரும்புவோம்.*

***கற்பழிப்பு (13:1-19)***

*அத்தியாயம் 13ன் முதற்பாகத்தில் உள்ள வரலாறு, என்னைப் பொறுத்தமட்டில் வேதாகமத்தில் உள்ள கவலை மிக்க வரலாறுகளில் ஒன்றாகும். ஒருவேளை எனக்கு மூன்று மகள்கள் இருப்பதால் இது எனக்கு இவ்வாறானதாகத் தோன்றலாம். இது இன்றைய நாளாயிருந்தால், இதன் விவரங்கள் வெளியிடப்பட்டு, இன்று தொலைக்காட்சிகளில் அதிகமாய் வரும் உண்மைச் சம்பவங்களின் அடிப்படையிலான கதை என்பதாகத் திரும்பி விடும். இது நாம் நினைத்துப் பார்க்க விரும்பாத, குறைவாகவே விவாதிக்கப்படுகின்ற பாவங்களைப் பற்றிய இழிவுமிக்க கதையாக உள்ளது. இருந்தபோதிலும், இங்கு நாம் பாவத்தின் விளைவு பற்றிய பாடம் ஒன்றைக் கற்றுக் கொள்வது அவசியமாக உள்ளது. நாம் அதை நோக்கி விரைவாய் நகர்வோம்.*

*இந்த அத்தியாயம் பின்வருமாறு தொடங்குகின்றது: “இதற்குப் பின்பு தாவீதின் குமாரனாகிய அப்சலோமுக்குத் தாமார் என்னும் பேருள்ள சவுந்தரியமுள்ள ஒரு சகோதரி இருந்தாள்” (13:1அ). அத்தியாயம் 3க்குப் பின்பு இப்பொழுதுதான் நாம் முதன்முதலாக அப்சலோமைப்பற்றி வாசிக்கின்றோம். இதற்கிடையில் இருபது ஆண்டுகள் கடந்து சென்றிருந்தன. தாவீதே, இந்த நாட்களில் எல்லாம் நீர் என்ன செய்து கொண்டிருந்தீர்? “நான் படைகளுக்குக் கட்டளையிட்டுக் கொண்டிருந்தேன். நான் நாட்டு நலம் குறித்து அக்கறை எடுத்துக் கொண்டிருந்தேன். நான் மனைவிகளைத் திருமணம் செய்து கொண்டு பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டிருந்தேன்.” தாவீதே, அந்தக் குடும்பத்தை நீர் என்ன செய்து கொண்டிருந்தீர்? உமது குடும்பத்துடன் நீர் என்ன வகையான உறவுமுறை கொண்டிருந்தீர்? அவர் எவ்வகையான உறவுமுறையும் கொண்டிருந்ததில்லை என்பது உறுதி.*

*தாவீது பத்சேபாளுடன் பாவத்திற்கு உட்படுவதற்கு முன்பு, தாவீது ஒரு கட்டளை கொடுத்தபோது அது [உடனே] செயல்படுத்தப்பட்டது. எல்லாரிடமிருந்தும் அவருக்கு மரியாதை இருந்தது. இப்பொழுது அவர்*

*தமது மரியாதையைப் பெருமளவுக்கு இழந்து போயிருந்தார் - சிறப்பாக, தமது பிள்ளைகளிடத்தில் அதை இழந்து நின்றார். அவரது பிள்ளைகளைப் பொறுத்தமட்டில் அவர் கீழ்ப்படியப்பட வேண்டிய தந்தையாக இருப்பதற்குப் பதில், அந்த அரசர் [அவர்களால்] திறமையாகக் கையாளப்படக்கூடியவரானார்.*

*"தாவீதின் குமாரனாகிய அப்சலோமுக்குத் தாமார்[5] என்னும் பேருள்ள சவுந்தரியமுள்ள ஒரு சகோதரி இருந்தாள்.'' தாவீதின் மற்ற மகன்கள், மகள்கள் யாவரும் அப்சலோமின் அரை சகோதரர்களாகவும் அரை சகோதரிகளாகவும் இருந்தார்கள். தாமார், அழகு மிகுந்த தாமார் அப்சலோமின் முழு சகோதரியாக இருந்தாள்.[6]*

*வசனம் 1ஐத் தொடர்ந்து வாசிப்போம்: "அவள்மேல் தாவீதின் குமாரன் அம்னோன் மோகங்கொண்டான்.'' அதிகாரம் 3க்குப் பின்பு நாம் அம்னோனைப் பற்றி வாசிப்பதும் இதுவே முதல்முறையாக உள்ளது. அம்னோன் தாவீதின் முதல் மகன், அரியணைக்கு வாரிசு என்று உறுதிப்படுத்தப்பட்டவர், முடிசூடிய இளவரசர் என்பதை நினைவில் வையுங்கள். "தாமார் மேல் ... அம்னோன் மோகங்கொண்டிருந்தான்." இந்த மோகம் என்பது, ''நாம் உறவுகொள்வோம்''[7] என்ற வகையிலான மோகமாயிருந்தது. அம்னோன் தமது அரை சகோதரியான தாமாரின் மேல் கொண்டிருந்த விரகதாபத்தினால் பட்சிக்கப்பட்டார். அவர் சுகவீனமாகும் அளவுக்கு அவரது விருப்பம் மிகவும் அதிகமாயிருந்தது, ஆனால் என்ன செய்வதென்று அவருக்குத் தெரியவில்லை. அரசரின் கன்னிப் பெண்ணான மகள் என்ற வகையில் தாமார் அரண்மனையின் இன்னொரு பகுதியில் பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருந்தாள்.[8]*

*"அம்னோனுக்கு ... யோனதாப்[9] என்னும் பேருள்ள ஒரு சிநேகிதன் இருந்தான்" (13:3). நீங்கள் தவறு செய்ய விரும்பினால், அதைச் செய்வதற்கு உங்களை ஊக்குவிக்கக் கூடிய ''ஒரு நண்பரை'' கண்டறிதல் என்பது கடினமாயிருப்பதில்லை, ஒருவேளை நீங்கள் அதை எப்படிச் செய்ய வேண்டும் என்றும் கூட அவர் உங்களுக்குக் கூறுவார்.[10] அம்னோனிடத்தில் யோனதாப், ''ராஜகுமாரனாகிய நீ, நாளுக்குநாள் எதினாலே இப்படி மெலிந்து போகிறாய்?" (13:4) என்று கேட்டார். வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், ''முடி சூடிய இளவரசர் என்ற வகையில் எல்லா அதிகாரங்களும் கொண்ட நீர் அரச குமாரனாயிருந்தும், அது உம்மை சந்தோஷப்படுத்தவில்லையா? நீர் சந்தோஷமடைய உமக்கு என்ன தேவை? அதை எவ்வாறு பெறுவது என்பதை நான் உமக்குக் கூறுவேன்" என்றார்.*

*அவ்விருவரும் தாவீதை எவ்வாறு கைப்பாவையாக ஆட்டி வைத்தார்கள் என்று கவனியுங்கள். அம்னோன் தம்மைக் கவலைப்படுத்தும் விஷயம் எது என்று யோனதாபிடம் கூறிய பின்பு, யோனதாப் பின்வருமாறு கூறினார்:*

> *நீ வியாதிக்காரனைப்போல உன் படுக்கையின்மேல் படுத்துக்கொள்; உன்னைப் பார்க்கிறதற்கு உன் தகப்பனார் வரும்போது, நீ, ''என் சகோதரியாகிய தாமார் வந்து, எனக்குப் போஜனம்கொடுத்து, அவள் கையினாலே சாப்பிடும்படிக்கு நான் பார்க்க, என் கண்களுக்கு*

*முன்பாகச் சமைக்கும்படி தயவுசெய்யவேண்டும்" என்று சொல் என்றான் (13:5).*

*அம்னோன் யோனதாபின் அறிவுரையைப் பின்பற்றினார். தாவீது தமது வாரிசின் உடல்நிலை பற்றி விசாரிக்க வந்தபோது, அம்னோன் யோன தாபின் பொய்யைக் கூறினார்; அம்னோனுக்கு தன் தகப்பனார்மேல் எந்த வித மரியாதையும் இல்லை. அவர் தாம் விரும்பிய விஷயத்தை உடனே பெறுவதற்கு அரசர் என்பவரே தவறாய்ப் பயன்படுத்தப்படக் கூடியவரா யிருந்தார். நீங்கள் விவரமில்லாத தந்தையாக இருக்கும்போது, மற்றவர்கள் உங்களைப் பயன்படுத்திக் கொள்வது என்பது மிகவும் சுலபமானதாக உள்ளது. விவரமில்லாத தந்தையர்கள் குற்ற உணர்வினால் நிறைந்து இருக்கின்றார்கள், தங்கள் பிள்ளைகள் தங்களை விரும்ப வேண்டும் என்று ஏங்குகின்றார்கள்; அவர்கள் கைப்பாவையாக ஆட்டிவைக்கப்படுவதற்குக் கனிந்தவர்களாய் இருக்கின்றார்கள்.*

*அம்னோனின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட தாவீது, தாமாரை அம்னோனின் அறைக்குச் சென்று அவருக்காக உணவு தயாரிக்கும்படிக் கட்டளையிட்டார். இருப்பினும் உணவு தயாரித்த பின்பு,[11] அவர் அதை உண்ண மறுத்தார். அவர் எல்லாரும் தமது அறையை விட்டு வெளியே போக வேண்டும் என்று கட்டளையிட்டார், பின்பு அவர் தாமாரிடத்தில், அந்த உணவைத் தமது படுக்கையறைக்குக் கொண்டு வந்து தமக்கு ஊட்டி விடும்படிக் கூறினார். அவள் அவ்வாறே வந்தபோது, அவர் அவளைப் பற்றிப் பிடித்துக் கொண்டு, "என் சகோதரியே, நீ வந்து என்னோடே சயனி" (13:11) என்று கூறினார். அவள் பயமடைந்து, அவரது காமத்தைக் கட்டுப் படுத்திக் கொள்ளும்படி கெஞ்சினாள்.[12] இதற்கு மாறாக "அவன் அவள் சொல்லைக் கேட்க மாட்டேன் என்று அவளைப் பலவந்தமாய்ப் பிடித்து, அவளோடே சயனித்து அவளைக் கற்பழித்தான்" (13:14) "அவன் அவளைக் கற்பழித்தான்"; அவர் தமது சொந்த சகோதரியைக் கற்பழித்தார்.*

*"பிற்பாடு அம்னோன் அவளை மிகவும் வெறுத்தான்; அவன் அவளை விரும்பின விருப்பத்தைப் பார்க்கிலும், அவளை வெறுத்த வெறுப்பு அதிகமாயிருந்தது. ஆகையால்: 'நீ எழுந்து போய்விடு' என்று அம்னோன் அவளோடே சொன்னான்" (13:15). இளம் பெண்களே, இந்த வார்த்தை களைக் கவனித்து அவற்றை உங்கள் இருதயத்தில் வைத்துக் கொள்ளுங்கள். ஒரு குறிப்பிட்ட மனிதர் தம்முடன் நீங்கள் பாலுறவு கொள்ள வேண்டும் என்பதற்காக உங்களிடம் "நேசமாய்" பேசுவார், ஆனால் உணர்வு செலவு செய்யப்பட்ட பின்பு, அவர் அதற்காக[வே] உங்களை வெறுத்து விடுவார். திருமண உறவுமுறையில், பாலுறவு என்பது அழகுமிகுந்த விஷயமாக உள்ளது (ஆதி. 2:23-25; எபி. 13:4), ஆனால் அந்த உறவு முறைக்குப் புறம்பாக, அது [பாலுறவு] அற்பத்தனமாகவும் அழகற்றதாகவும் ஆகக்கூடும்.*

*அவருடைய கால்களில் விழுந்த தாமார், அவர் தன்னைத் துரத்தி விட வேண்டாம் என்று கெஞ்சினாள், ஆனால் அவர் அதைக் கவனிக்கவில்லை. அவர் தமது வேலைக்காரனிடத்தில், "நீ இவளை ["தாமார்" அல்ல "என் சகோதரி" அல்ல, ஆனால் "இவள்"] என்னை விட்டு வெளியே தள்ளி,*

*கதவைப்பூட்டு என்றான்'' (13:17). தாமார் தன் கன்னித்தன்மையின் அடையாளமாய் தான் உடுத்திக் கொண்டிருந்த உடையைக்[13] கிழித்துக் கொண்டு, கண்களில் கண்ணீர் வழிய[14] அவ்விடம் விட்டுப் போனாள்.*

*"அம்னோனே, நீர் இராஜவம்சத்தைச் சேர்ந்தவர் என்பதால், நீர் விரும்புகின்ற எந்தப் பெண்ணையும் நீர் அடையலாம் என்ற கருத்தை எங்கு பெற்றுக் கொண்டீர்? காம இச்சை கட்டுப்படுத்தப்படாமல், நிறைவேற்றப் பட வேண்டும் என்ற கருத்தை நீர் எங்கு பெற்றுக் கொண்டீர்?" அம்னோன் ஒருவேளை புன்முறுவல் பூத்து, "அதை நான் என் அப்பாவிடமிருந்து கற்றுக் கொண்டேன்" என்று பதில் கூறலாம். தந்தையைப் போலவே பிள்ளையும் ஆனான்.*

*பட்டயம் என்றைக்கும் தாவீதின் வீட்டை விட்டு விலகாதிருக்கும்.*

*தாவீது, இந்த இழிவான செயல் பற்றி அறிந்தபோது, என்ன செய்தார்? 13:21ஐ நோக்குங்கள்: "தாவீதுராஜா இந்தச் செய்திகளையெல்லாம் கேள்விப்பட்டபோது, வெகு கோபமாயெரிந்தான்."[15] அவர் அம்னோனை கண்டிக்கவில்லை; அவர் தாமாரை ஆறுதல்படுத்தவில்லை; அவர் பிரச்சனையைத் தீர்த்து வைக்க எல்லாரையும் ஒன்று கூட்டவில்லை. அவர் வெறிகொண்டவராக மட்டும் ஆனார். அவரது புத்தகத்தில் ஒரு பக்கத்தையே அம்னோன் பிரதியெடுத்திருக்க, அவர் எப்படி அம்னோனைக் கண்டிக்க முடியும்?*

*"மனிதன் எதை விதைக்கின்றானோ, அதையே அறுப்பான்" - மன்னிப்பு என்பது ஈடுகொடுத்து நிற்பதில்லை.*

***பழிவாங்குதல் (13:20-36)***

*நடந்தது என்ன என்பதை, தாமாரின் முழு சகோதரரான அப்சலோம் அறிந்தபோது, அவர் அம்னோனுக்குத் தண்டனை தராமல் விடக்கூடா தென்று தீர்மானித்தார். அவர் தாமாரிடத்தில், "உன் சகோதரனாகிய அம்னோன் உன்னோடிருந்தானோ?" என்று கேட்டார். அப்சலோம் ஏன் அம்னோன் மீது சந்தேகம் கொண்டார் என்று எனக்குத் தெரியவில்லை. அவர் அம்னோனின் கண்களில் காம இச்சையைக் கண்டாரா? அவர் ஒரு வதந்தியைக் கேள்விப்பட்டாரா? தாமார் பேச இயலாதவளாக, அழுது கொண்டே தன் தலையை (ஆம் என்று கூறும் வகையில்) அசைப்பதை நான் காண்கின்றேன். அப்சலோம், "என் சகோதரியே, நீ மவுனமாயிரு" என்று கூறினார் (13:20). கனவீனமடைந்த தாமார், அப்சலோமின் வீட்டில் ஒதுங்கி வாழ்பவளானாள்.*

*"அப்சலோம் அம்னோனோடே நன்மையாகிலும் தீமையாகிலும் பேசவில்லை; தன் சகோதரியாகிய தாமாரை அம்னோன் கற்பழித்த காரியத்தினிமித்தம் அப்சலோம் அவனைப் பகைத்தான்'' (13:22). அப்சலோம் தமது சகோதரருடன் பேசாமலேயே இரண்டு ஆண்டுகள் கடந்தன. அவர்கள் ஒரே மேசையில் உணவு உண்டார்கள், அரண்மனை யின் அறைகளில் ஒருவரையொருவர் கடந்து சென்றார்கள், ஆனால் அப்சலோம், அம்னோன் அங்கிராதது போலச் செயல்பட்டார். அது செய்தித் தொடர்பற்ற வீடாயிற்று. தாவீது தம் பிள்ளைகளுடன் பேசுவதில்லை;*

*அவரது பிள்ளைகள் ஒருவரோடொருவர் பேசுவதில்லை. "இரண்டு முழு ஆண்டுகள் அளவாக" செய்தித் தொடர்பு இல்லாமல் போய்விட்டது (13:23).*

*நாளாக நாளாக அப்சலோம் தம் அழகிய சகோதரி இளைத்தும் வெளுத்தும் போனதைக் கண்டபோது, இந்த வேளை முழுவதிலும், அப்சலோமின் ஆத்துமாவில் வெறுப்பு விஷமாக வளர்ந்து கொண்டு இருந்தது (2 சாமு. 13:32ஐக் கவனிக்கவும்). அப்சலோமின் சிந்தையில் பழிவாங்குதலுக்கான திட்டம் ஒன்று வடிவம் பெற்றது. "இரண்டு வருஷம் சென்றபின்பு, அப்சலோம் எப்பிராயீமுக்குச் சமீபமான பாலாத்சோரிலே[16] ஆட்களை வைத்து, ஆடுகளை மயிர்கத்தரிக்கிற வேலையில் இருந்தான்: அங்கே ராஜகுமாரர் எல்லாரையும் விருந்துக்கு அழைத்தான்" (13:23). ஆடுகளுக்கு மயிர்கத்தரிக்கும் வேளை என்பது வைபவ வேளையாக இருந்தது[17] - மற்றும் அப்சலோம், அந்த விருந்தில்[18] கலந்து கொள்ளும்படி தமது சகோதரர்கள் யாவருக்கும் அழைப்பு விடுத்தார். அப்சலோம், குறிப்பாக அந்த விருந்தில் அம்னோன் கலந்து கொள்ள வேண்டும் என்பதில் ஆர்வமாயிருந்தார். அம்னோன் அப்சலோமின் அழைப்பை ஏற்றுக் கொள்ளாததால், இவ்விஷயத்தில் தாவீதைக் கைப்பாவையாக்க அப்சலோம் அவரிடத்தில் [தாவீதிடத்தில்] சென்றார்.*

*அப்சலோம் அந்த விருந்திற்குத் தாவீதை அழைத்தார். அவர் மறுத்தபோது (அவர் மறுப்பார் என்பது அப்சலோமுக்குத் தெரியும்), அப்சலோம், "அப்படியென்றால் உங்கள் பிரதிநிதியாக முடிசூடிய இளவரசரை அனுப்பி வையுங்கள்" என்று கூறினார். முதலில் தாவீது மறுத்தார் (அவர் சந்தேகம் கொண்டிருந்தாரா?), ஆனால் அப்சலோம் அவரை வருந்திக் கேட்டுக் கொண்டார்[19] (இது கைப்பாவை ஆக்குவதற்கான சரியான வகை முறையாகும்). கடைசியில் தாவீது அம்னோன் செல்வதற்கு அனுமதி கொடுத்தார்.*

*விருந்து தொடங்கியபோது, அப்சலோம் அம்னோனை மது அருந்தச் செய்தார், பின்பு தமது வேலைக்காரர்களிடம் அவரை [அம்னோனை] கொல்லும்படி கட்டளையிட்டார். முடிசூடிய இளவரசர் ஒரே நிமிடத்தில், தரையின் மீது இரத்தவெள்ளத்தில் சாய்ந்தார். மற்ற இளவரசர்கள் யாவரும் தங்கள் உயிருக்குப் பயந்து ஓடி விட்டார்கள்.[20]*

*"அப்சலோமே, யாரேனும் ஒருவரை மது அருந்தி வெறிக்கச் செய்து அதன் மூலம் அவரது தற்காப்பைக் குறைத்து விடலாம் என்று நீர் யாரிடத்தில் கற்றுக் கொண்டீர்? உமக்குப் பதிலாக வேறொருவரை வைத்துக் கொலை செய்விக்கலாம் என்பதை நீர் யாரிடத்தில் கற்றுக் கொண்டீர்?" அப்சலோம் ஒருவேளை, புன்முறுவல் பூத்து, "அதை நான் என் அப்பாவிடமிருந்து கற்றுக் கொண்டேன்" என்று பதில் கூறலாம். தந்தையைப் போலவே பிள்ளையும் ஆனான்.*

*பட்டயம் என்றைக்கும் தாவீதின் வீட்டை விட்டு விலகாதிருக்கும்.[21]*

***தப்பி ஓடுபவர் (13:37-14:33)***

*"அப்சலோமோ அம்மியூதின் குமாரனாகிய தல்மாய் என்னும் கேசூரின்*

*ராஜாவினிடத்திற்கு ஓடிப்போனான்" (13:37). தல்மாயை நினைவிருக் கின்றதா? இவரைப் பற்றி நாம் 3ம் அத்தியாயத்தில் வாசித்தோம். அவர் அப்சலோமின் தாயினுடைய தந்தையாயிருந்தார். அப்சலோம் தமது தாய் வழித் தாத்தாவான கேசூரின் அரசரிடத்தில் அடைக்கலமாய் ஓடிச் சென்றார். ஒருவேளை அப்சலோம் தமது தாத்தாவுடன் ஒரு விசேஷித்த உறவுமுறை கொண்டிருக்கலாம். ஒருவேளை அவருக்குப் பலத்த தந்தை உருவகம் ஒன்று தேவைப்பட்டிருக்கலாம். ஒருவேளை அவர் எருசலேமில் இருந்து இயன்ற அளவுக்குச் சற்று தூரத்தில் இருக்கலாம் என்று மாத்திரம் விரும்பியிருந்திருப்பார் (கேசூர் வடக்கில் வெகு தூரத்தில் இருந்தது[22]).*

*மூன்று ஆண்டுகள் - மூன்று நீண்ட ஆண்டுகள் கடந்து சென்றன. தாவீதின் இதயத்திலிருந்த வேதனை மெதுவாக நீங்கிற்று, அவர், "அம்னோனுக்காகத் துக்கித்து ஆறுதலானார்" (13; 39அ). பின்பு அவர் "அப்சலோமைப் பின்தொடரும் நினைவை விட்டுவிட்டான்" (13:39அ). தாவீது ஏன் செல்லவில்லை? அவரது இருதயத்தில் அப்சலோமுக்கு எப்போதுமே ஒரு தனி இடம் இருந்தது (அடுத்த அத்தியாயத்தின் முதல் வசனத்தை வாசிக்கவும்; 2 சாமு. 14:1). இப்போது அம்னோன் இறந்து போனார், அப்சலோம்தான் இருப்பவர்களிலேயே மூத்த மகனா யிருந்தார்.[23] தாவீது ஏன் அவருடன் [அப்சலோமுடன்] இணைந்து செயல்படக் கூடாது?*

*நாம் கண்டிருந்ததை விட வயது முதிர்ந்தவராயிருந்த தாவீது, தமது தலையை மட்டும் (இல்லை என்ற தொனியில்) அசைத்திருப்பார். "நான் ராஜா. எனக்கென்று கௌரவம் உள்ளது. நான் அதைச் செய்ய முடியாது."*

*இவ்விதமாக ஒன்றும் நடவாதிருந்தது.*

*அத்தியாயம் 14ல் யோவாப், எருசலேமுக்கு அப்சலோமைத் திருப்பிக் கொண்டு வருவதில் தாவீதை வெட்கப்படுத்த ஒரு திட்டத்தை வடிவமைத்தார்.[24] நாத்தானுடைய உத்தியைக் கடன் வாங்கிய அவர், தாவீதினிடத்தில் சென்று ஒரு கதை கூறும்படி [புத்தியுள்ள] ஒரு பெண்ணை[25] அமர்த்தினார். அவள் கூறிய கதையானது, அவளுடைய மகன்கள் இருவரில் ஒருவன் இன்னொருவனைக் கொலை செய்தான் என்பதாக இருந்தது[26] - இது அம்னோனை அப்சலோம் கொலை செய்வித்ததை இணையாக்கிற்று. அவளது கதையினால் இருதயம் தொடப்பட்ட தாவீது, அவளது மகனைக் கொன்ற இன்னொரு மகனை மன்னித்துவிட்டார். பின்பு அந்தப் பெண் செயல்விளைவில், ''நான் உண்மையில் அப்சலோமைப் பற்றிப் பேசுகின்றேன். இஸ்ரவேலர் யாவரும் அவர் [அப்சலோம்] திரும்பி வர வேண்டும் என்று விரும்புகின்றார்கள். நீர் ஏன் அவரை மன்னித்து வீட்டிற்குத் திரும்பக் கூட்டி வரக்கூடாது?" என்று கூறினாள்.*

*[இதயம்] அசைக்கப்பட்ட தாவீது, யோவாபைப் பார்த்து, "இதோ, இந்தக் காரியத்தைச் செய்கிறேன், நீ போய் அப்சலோம் என்னும் பிள்ளையாண்டானைத் திரும்ப அழைத்துக்கொண்டுவா" என்று கூறினார் (14:21). "பின்பு யோவாப் எழுந்து, கேசூருக்குப் போய், அப்சலோமை எருசலேமுக்கு அழைத்துக்கொண்டு வந்தான்" (14:23).*

*ஆயினும், தாவீது கொடுத்த இருதயத்தை உடைக்கும் அறிவுறுத்தலைக்*

கவனியுங்கள்: "அவன் என் முகத்தைப் பார்க்கவேண்டியதில்லை; தன் வீட்டுக்குத் திரும்பிப்போகட்டும்" (2 சாமு. 14:24). இவர் தாவீதினால் மிகவும் பிரியம் வைக்கப்பட்ட மகனாயிருந்தார் (2 சாமு. 13:39). ராஜாவின் இருதயம் "தாங்கலாய் இருந்த" குமாரன் இவன்தான் (14:1). தாவீது பட்சிக்கிற அன்பினால் நேசித்த குமாரன் இவன்தான் (2 சாமு. 18:5, 33; இ.வ. 19:6). மேலும் அவர், "அவனைத் திரும்ப அழைத்துக் கொண்டு வா, ஆனால் நான் அவனைப் பார்க்க விரும்பவில்லை" என்று கூறினார். தாவீதுக்கும், ஊதாரி மகன் திரும்பி வந்தபோது அவனது தந்தைக்கும் இடையில் தெளிவாக உள்ள நேரெதிர்ப்பண்பைக் கவனியுங்கள்: "அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவனை முத்தஞ் செய்தான்" (லூக். 15:20). தாவீது, "அவன் என் முகத்தைப் பார்க்க வேண்டியதில்லை; தன் வீட்டுக்குத் திரும்பிப் போகட்டும்" என்று கூறினார்.

அப்சலோம் செய்திருந்த கொலைக்காகத் தாவீது அவரை கல்லெறிந்து கொலை செய்வித்திருக்க வேண்டும் என்று நியாயப்பிரமாணம் கூறிற்று, ஆனால் அதே நியாயப்பிரமாணத்தினால் தீர்ப்பிடப்பட்டிருந்த தாவீது, தாமே அதை நிறைவேற்ற முடியாதவரானார். அதற்கு மறுபுறத்தில், தாவீது அப்சலோமுக்குத் தண்டனை விதிக்காது இருப்பாரென்றால், அவரை அவர் மன்னித்து அரண்மனையில் அவருக்கு முன்பிருந்த முழு அந்தஸ்தையும் திரும்ப ஏற்படுத்தியிருக்க வேண்டும்.[27] தாவீது அதைச் செய்ய விரும்ப வில்லை, எனவே அவர் ஒன்றும் செய்யாதிருந்தார்.

"அப்சலோம் ராஜாவின் முகத்தைக் காணாமலே, இரண்டு வருஷம் எருசலேமிலே குடியிருந்தான்" (14:28). அப்சலோம் தன் தாத்தாவோடு மூன்று ஆண்டுகள் தங்கியிருந்திருந்தார். இப்போது அவர் இரண்டு ஆண்டுகளாகத் தமது வீட்டிலே தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். ஐந்து முழு ஆண்டுகள் அவர் தமது தந்தையைக் காணாதிருந்தார்!

அப்சலோம் "play-me-or-trade-me"[28] என்ற வலியுறுத்தத்தைச் செயல் படுத்தி, அந்தச் சூழ்நிலையை வலிந்து மாற்றத் தீர்மானித்தார். அவர் தமக்காக யோவாப் பரிந்துரை செய்ய வேண்டும் என்று விரும்பினார், ஆனால் யோவாப் அவரைப் புறக்கணித்தார்.[29] அப்சலோம், யோவாபின் கவனத்தைப் பெறுவதற்காகத் தமது வேலையாட்களைக் கொண்டு யோவாபின் வாற்கோதுமை வயல்களைத் தீக்கரையாக்கினார்![30] அதன் பின் யோவாப் அப்சலோமின் சார்பாக அரசரிடம் சென்று பேசினார், கடைசி யில் ஐந்து ஆண்டுகளுக்குப் பின்பு தாவீது தமது மகனை அழைப்பித்தார். கடைசியில் அவர்கள் எல்லா விஷயங்களையும் வெளிப்படையாகப் பேச வாய்ப்பைப் பெற்றார்கள். கடைசியாக அவர்கள் ஒன்றாய்ப் பேச முடிந்தது. கடைசியாக விஷயங்கள் யாவும் நேராக்கப்பட முடிந்தது. கடைசியாக அவர்கள் இருவரும் ஒப்புரவாக முடிந்தது. ஆயினும் 14:33ன் முடிவுக் காட்சியைக் கவனியுங்கள்: "அவன் [அப்சலோம்] ராஜாவுக்கு முன்பாகத் தரையில் முகங்குப்புற விழுந்து வணங்கினான், அப்பொழுது ராஜா அப்சலோமை முத்தமிட்டான்." அந்தக் காட்சி உங்களை எவ்வாறு தாக்குகிறதென்று எனக்குத் தெரியாது, ஆனால் முத்தமிடுதல் என்பது ஒரு

*சடங்காச்சாரமான/சாதாரணமான வாழ்த்து என்பது புரிந்திருப்பதால், இது என்னைக் குளிராக, மிகவும் குளிராகத் தாக்குகின்றது.*

*இதை இன்றைய நாளின் பழக்கங்களில் வைத்துப் பாருங்கள்: ஒரு மகன் தன் தந்தையுடன் பேசுவதற்கான நேரத்தையும் இடத்தையும் கண்டறியப் பல மாதங்களாக முயற்சி செய்திருக்கின்றான். கடைசியில் அவன் அவரது வீட்டின் முகப்பறையில் அவருக்கு முன்பாக நிற்கின்றான். அவரது கால்களில் விழுந்த அப்பையன், தன் தந்தையின் முகத்தைப் பார்க்கக் கூட துணியாமல், மென்மையாக, "என்னை ... மன்னியுங்கள் ... அப்பா!" என்று கூறுகின்றான். அதைப்பற்றிச் சற்றே சிந்தித்த தந்தை, மாறுபாடற்ற தொனியில் "சரி ... ஆனால் இது மீண்டும் நடக்காதவாறு பார்த்துக் கொள் ... அதை நாம் உதறிவிடுவோம்" என்று கூறுகின்றார்.*

*தந்தைக்கும் மகனுக்கும் இடையில் இன்னமும் உண்மையான செய்தித் தொடர்பு நிலவாதிருந்தது.*

***கலகம் (15:1-16:23)***

*அப்சலோமின் இருதயத்தில் கட்டியெழுப்பப்பட்டிருந்த வெறுப் புணர்வு யாவையும், அத்தியாயம் 15ல் அவர் தம் தந்தைக்கு எதிராக ஒரு சூழ்ச்சியைத் தொடங்கியபோது நன்றாக வெளியாயிற்று. அப்சலோம் மக்களின் இருதயங்களில் இடம் பிடிப்பதற்காக[31] நான்கு ஆண்டுகளை[32] ஒப்புக் கொடுத்திருந்தார். அவர் ஒரு ராஜ இரதத்தில்[33] ஏறி, தம்மைச் சேவித்துப் பாதுகாத்த ஐம்பது சேவகர்கள் தமக்கு முன் ஓடும்படி செய்து, யாவரும் காணும்படியாக நாட்டைச் சுற்றி வந்தார். (அவர் தமக்குத் தாமே பேரணி நடத்திக் கொண்டவராயிருந்தார்!) அவர் ராஜாவின் பள்ளத் தாக்கில் தமக்கென்று ஒரு தூணை நிறுவி வைத்தார்,[34] மக்களுக்கு முன்பாகத் தமது பெயரை வைத்துக் காத்தார்.[35] ஒவ்வொரு நாளும் அவர் அரண்மனை வாயிலில் நின்று, ராஜாவிடத்தில் நியாயம் விசாரிக்க வருகின்றவர்களை இடைமறித்தார். வார்த்தைகளினாலும் செயல்களினாலும் அவர் பின்வரும் சிந்தனைகளை மக்கள் மனதில் நாட்டினார்: "என் தந்தையைப் போலின்றி, நான் எளிதில் அணுகக் கூடியவனாக இருக்கின்றேன், நான் நியாயமான வனாக இருக்கின்றேன்!"[36]*

*கடைசியாக, அரியணைக்கு அவர் தம் உரிமையைக் கோரவேண்டிய சரியான வேளை வந்து சேர்ந்தது. அவர் தமது அறிவிப்புக்கு ஏற்ற இடமாக எப்ரோனைத் தேர்ந்தெடுத்தார். எப்ரோன் என்பது தர்க்கரீதியாகத் தேர்வு செய்யப்பட்ட இடமாயிருந்தது. அது எருசலேமில் இருந்து சற்றுத் தொலைவில் இருந்தது. அது இன்னமும் இஸ்ரவேலர்களின் சிந்தைகளில் விசேஷித்த இடமாக இருந்தது. அதன் குடிமக்கள், தாவீது தலைநகரை எப்ரோனில் இருந்து எருசலேமுக்கு மாற்றியதில் அநேகமாக மகிழ்வற்றவர் களாய் இருந்தார்கள். மேலும், அது அப்சலோம் பிறந்த இடமாயிருந்தது; அப்சலோம் அந்த மண்ணின் மைந்தனாய் இருந்தார்.*

*அப்சலோம் சென்ற இடங்களில் எல்லாம் ஒரு கூட்டத்தை ஈர்த்து இருந்ததால், தாம் தமது தாத்தாவுடன் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் கர்த்தருக்கு ஒரு பொருத்தனை செய்திருந்ததாகவும் அதை நிறைவேற்ற*

இப்பொழுது தாம் எப்ரோனுக்குச்[37] செல்லுவதாகவும் கூறி தமது தந்தையிடம் தம் உண்மையான நோக்கங்களை மறைத்தார்.[38] அப்சலோம் சீரியாவிலிருந்து வந்து ஆறு ஆண்டுகளுக்கு மேல் ஆகியிருந்ததால், அது ஒரு தொலைவிலிருந்து கொண்டு வரப்பட்ட கதையாக இருந்தது, ஆனால் தாவீது தொடர்ந்து சுலபமாக கைப்பாவையாக்கப்படக் கூடியவரா யிருந்தார்.[39] தாவீது, "சமாதானத்தோடே போ" (15:9) என்றார். இந்த வார்த்தைகள் அவர் தம் மகனுடன் பேசிய கடைசி வார்த்தைகளாயிருந்தன, அப்சலோம் அவ்விடம் விட்டுச் சென்ற பின்பு, அவருக்கோ, தாவீதுக்கோ அல்லது நாட்டிற்கோ சமாதானம் இல்லாது போனது என்பது முரண் பாடானதாக இருந்தது.

வேவுகாரர்கள் நாடு முழுவதும் அனுப்பப்பட்டார்கள், ஒரு பெரிய கூட்டம் எப்ரோனில் கூடிற்று. எக்காளத் தொனி கேட்டபோது, அவர்கள் "அப்சலோம் எப்ரோனிலே ராஜாவானான்" (15:10) என்று உரத்துச் சொன்னார்கள்.[40]

"அதை அறிவிக்கிற ஒருவன் தாவீதினிடத்தில் வந்து, 'இஸ்ரவேலில் ஒவ்வொருவருடைய இருதயமும் அப்சலோமைப் பற்றிப்போகிறது' என்றான்" (15:13). தாவீதின் மிகுந்த நம்பிக்கைக்கு உரிய ஆலோசகனான அகித்தோப்பேலும் கூட அப்சலோமின் பக்கம் சாய்ந்து போயிருந்தார்.[41] தாவீது பேரழிவுக்குள்ளாக்கப்பட்டார். பட்டயம் தொடர்ந்து பளிச்சிட்டு காயப்படுத்திற்று.

> அப்பொழுது தாவீது எருசலேமிலே தன்னிடத்திலுள்ள தன்னுடைய எல்லா ஊழியக்காரரையும் நோக்கி: "எழுந்து ஓடிப்போவோம், இல்லாவிட்டால் நாம் அப்சலோமுக்குத் தப்ப இடமில்லை, அவன் தீவிரித்து நம்மிடத்தில் வந்து, நம்மைப் பிடித்து நம்மேல் பொல்லாப்பு வரப்பண்ணி, நகரத்தைப் பட்டயக்கருக்கினால் சங்காரம் பண்ணாதபடிக்குத் தீவிரமாய்ப் புறப்படுங்கள்" என்றான் (15:14).

தாவீது அரண்மனையைக் கவனித்துக் கொள்வதற்காகப் பத்து மறுமனையாட்டிகளை அங்கேயே பின் வைத்துச் சென்றார்; பின்பு அவரும் பற்றுறுதிமிக்க அவரது வேலைக்காரர்களும் நகரத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்றார்கள். அது தாவீதின் வாழ்வில் மிகவும் சிறுமையான பொழுதுகளில் ஒன்றாக இருந்தது.

> அப்படியே ராஜாவும் அவனுடைய வீட்டார் எல்லாரும் கால் நடையாய்ப் புறப்பட்டு, ...
>
> சகல ஜனங்களும் நடந்துபோகிறபோது, தேசத்தார் எல்லாரும் மகா சத்தமாய் அழுதார்கள்; ராஜா கீதரோன் ஆற்றைக் கடந்தான்; ...
>
> தாவீது தன் முகத்தை மூடி, வெறுங்காலால் நடந்து அழுது கொண்டு, ஒலிவ மலையின்மேல் ஏறிப்போனான்; அவனோடிருந்த சகல ஜனங்களும் முகத்தை மூடி அழுதுகொண்டு ஏறினார்கள் (15:16, 23, 30).

தாவீது இவ்வாறு ஓடிப்போவதற்குப் பல நோக்கங்கள் கொண்டிருந்

*தார். அவர் தேவனுடைய நகரத்தில் இரத்தக் குளியல் நடைபெறுவதை விரும்பாதிருந்தார். அவர் நகரத்தைப் பாதுகாக்க விரும்பினார். ஆயினும், நமது வேத பாடப்பகுதி, அவர் பயந்ததுதான் அவ்வாறு ஓடியதற்கு முக்கிய காரணமாக இருந்ததென்று மறைமுகமாய் உணர்த்துகின்றது: "எழுந்து ஓடிப் போவோம், இல்லாவிட்டால், நாம் அப்சலோமுக்குத் தப்ப இடமில்லை, அவன் தீவிரித்து நம்மிடத்தில் வந்து, நம்மைப் பிடித்து நம்மேல் பொல்லாப்பு வரப்பண்ணி, நகரத்தைப் பட்டயக் கருக்கினால் சங்காரம் பண்ணாதபடிக்குத் தீவிரமாய்ப் புறப்படுங்கள்'' (15:14).[42] தாவீது பத்சேபாளுடன் பாவத்திற்கு முன்பு, அவர் இந்த வகையில் பதில்செயல் செய்திருக்க மாட்டார்.[43] அவரது வாழ்வு கட்டுப்பாட்டை இழந்து நின்றது, அவர் தமக்காக பிறர் முடிவெடுக்க அனுமதித்துக் கொண்டிருந்தார்.*

*விரைவிலேயே அப்சலோமும் அவரது படையும் எருசலேமை நோக்கி அணிவகுத்து வந்தனர். அது அவ்வளவு சுலபமாக இருந்ததைக் கண்டு அப்சலோம் அநேகமாக ஆச்சரியப்பட்டு திகைத்திருப்பார். அவர் தாம் போரிட வேண்டிய யுத்தத்திற்கு அப்பால் ஏதொன்றையும் திட்டமிட வில்லை. அவர் (தமது தந்தையின் முன்னாள் ஆலோசகரும் இப்போது தமக்கு ஆலோசகருமாயிருந்த; 2 சாமு. 16:23) அகித்தோப்பேலிடம் "நாங்கள் [அடுத்துச்] செய்ய வேண்டியது என்ன?" (16:20) என்று கேட்டார். அதற்கு அகித்தோப்பேல், ''வீட்டைக் காக்க உம்முடைய தகப்பன் பின்வைத்த அவருடைய மறுமனையாட்டிகளிடத்தில் பிரவேசியும்" (16:21) என்று கூறினார். இந்த செய்கையினால் அப்சலோம் மூன்று விஷயங்களை மக்களுக்குச் செயல்விளக்கப்படுத்துவார்: அவர் தமது தந்தையின் அரச பதவியை எடுத்துக் கொள்ளுதல், அவர் தமது தந்தையைக் குறித்து பயப்படாதிருத்தல், மற்றும் அவருக்கும் தாவீதுக்கும் இடையில் இருந்த எல்லாப் பிணைப்புக்களுக்கும் மாற்றப்பட முடியாத வகையில் முறிபடுதல்.[44] எனவே அவர்கள் அப்சலோமுக்கு உப்பரிகையின் மீது [இதுவே இவை யாவையும் தொடங்கிய இடமாயிருந்தது; 11:2] ஒரு கூடாரத்தைப் போட்டார்கள், "அங்கே அப்சலோம் சகல இஸ்ரவேலரின் கண்களுக்கு முன்பாக, தன் தகப்பனுடைய மறுமனையாட்டிகளிடத்தில் பிரவேசித்தான்" (16:22).*

*விதைத்தல் மற்றும் அறுத்தலின் இரு விதிகளை நினைவில் வையுங்கள்: நீங்கள் [விதைக்கின்ற] வகையையே அறுக்கின்றீர்கள், ஆனாலும் நீங்கள் அதிகமானவற்றை அறுக்கின்றீர்கள். தாவீது ஒரு பெண்ணுடன் விபசாரம் செய்தார்; அப்சலோம் பத்துப் பெண்களுடன் விபசாரம் செய்தார். தாவீது உள்ளரங்கமாக விபசாரம் செய்தார்; அப்சலோம் வெளியரங்கமாக "சகல இஸ்ரவேலரின் கண்களுக்கு முன்பாக" விபசாரம் செய்தார். இவ்விதமாக, தாவீதின் பாவத்திற்குப் பிந்திய விளைவுபற்றிய மிகவும் இழிவான செயல் பற்றிய தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று:*

> *கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், "இதோ, நான் உன் வீட்டிலே பொல்லாப்பை உன்மேல் எழும்பப் பண்ணி, உன் கண்கள் பார்க்க, உன் ஸ்திரீகளை எடுத்து, உனக்கு அடுத்தவனுக்குக் கொடுப்பேன்;*

*அவன் இந்தச் சூரியனுடைய வெளிச்சத்திலே உன் ஸ்திரீகளோடே சயனிப்பான்" (2 சாமு. 12:11).*

*உப்பரிகையில் இருந்த அந்தக் கூடாரத்திலிருந்து வெளியே வந்த அப்சலோம், கும்பலைப் பார்த்து புன்னகை செய்து, தமது கைகளை வெற்றியின் அடையாளமாக உயர்த்துவதை நான் காண முடிகிறது. அவர் தமது தந்தை நிலைநின்றிருந்த ஒவ்வொன்றிற்கும் எதிராகக் கலகம் செய்கையில், அவரது தந்தை மீது அவர் கொண்டிருந்த வெறுப்பும் விரோதமும் அவரை எந்த அளவுக்கு தூரத்தில் எடுத்துச் சென்றுவிட்டது![45]*

*இந்த இளம் கலகக்காரருக்குச் சில வார்த்தைகள் கூறுவதற்காக இங்கு நான் சற்றே தாமதிக்க வேண்டும்: அப்சலோமே, உமது தந்தை எவ்வகையான தந்தையாயிருக்க வேண்டுமோ, அவ்வகையான தந்தையாயிராது போனது உண்மையானதுதான். அவர் உம்மைப் புறக்கணித்திருந்தார் என்பது உண்மையானதுதான். அவர் பாவத்தில் தவறி வீழ்ந்தார் என்பதும், பின்பு அதை மூடும் முயற்சியில் பாவத்தைப் பெருக்கிக் கொண்டார் என்பதும் உண்மையானதுதான். நீர் எருசலேமுக்குத் திரும்பிய பின்பு உம்மோடு ஒப்புரவாக அவர் ஒரு முயற்சியும் செய்யவில்லை என்பதும் உண்மையானதுதான் ஆயினும், இவை யாவும் நீர் செய்கின்ற காரியங்களுக்குச் சாக்குப்போக்காக இருக்கின்றனவா?*

*அப்சலோமின் முகத்திலிருந்த புன்னகை துடைக்கப்படுகின்றது, அவர் அநேகமாக, "ஆம், ஒரு ஆயிரம் முறைகள் ஆம்!" என்று உறுமுவார்.*

*அப்சலோமே, ஒரு கணம் பொறுங்கள். [நீங்கள் வளர்ந்த அதே] வீட்டில் அதே சூழ்நிலையில் வளர்க்கப்பட்டு, கலகக்காரர்களாக இருந்திராத, குறைந்தபட்சம் மற்ற பதினெட்டு பையன்களை எனக்குத் தெரியும் (இன்னொரு மகன் பின்பு கலகம் செய்தார், ஆனால் இந்த வேளையில் அவர் அதைச் செய்யவில்லை), இவர்கள் ஒரு சூழ்ச்சிக்குப் பொறுப்பு வகித்து, ஒரு கலகத்தை வழிநடத்தவில்லை.*

*அப்சலோமின் தந்தையார், தாம் விதைத்ததையே அறுவடை செய்து கொண்டிருந்ததை அப்சலோம் புரிந்து கொள்ளத் தவறினார். அதே கொள்கை தமது வாழ்விலும் நடைமுறைப்படும் என்பதையும் அவர் புரிந்து கொள்ளத் தவறினார். அவர் சுயாதீனமான தேர்வைக் கொண்டிருந்தார்; அவர் மேற்கொண்ட நடவடிக்கைகளைச் செய்யும்படி எவரொருவரும் அவரை நிர்ப்பந்தம் செய்யவில்லை. அவரே தமக்குப் பொறுப்பாளியாயிருந்தார். அவர் தமது தந்தைக்குச் செய்தவற்றிற்கு [வேறு யார் மீதும்] பழிபோட முடியாது. நான் கூறுவதைக் கவனியுங்கள்: நீங்கள் அறுப்பதையே கூட நீங்கள் விதைப்பீர்கள்!*

*நான் கூறியுள்ளது உண்மையாக உள்ளதா? இன்று அப்சலோம் இங்கு நிற்க முடியும் என்றால், அவர் "ஆமென், இது உண்மையாகவே உள்ளது!" என்று கூறுவார் என்பதை நான் உங்களுக்கு உறுதிப்படுத்த அனுமதியுங்கள். இந்த வரலாற்றின் முடிவைக் கவனியுங்கள்:*

*மதிப்பிடுதல் (18:1-33)*

*அத்தியாயம் 18ல் தாவீதின் படை, அப்சலோமின் படையைச் சந்திக்கத் தயாரிப்புகளை மேற்கொண்டது. தாவீது தமது படையை நடத்திய தளபதிகளுக்கு, "பிள்ளையாண்டானாகிய அப்சலோமை என்னிமித்தம் மெதுவாய் நடப்பியுங்கள்" (வ. 5) என்று கட்டளையிட்டார். (சங். 103:13அ-வில் தாவீதின் வார்த்தைகளைக் கவனிக்கவும்.)*

*யுத்தம் தொடங்கியது. இருபதினாயிரம் மனிதர்கள் கொல்லப் பட்டார்கள். கலகக்கார இளைஞரான அப்சலோம் தாம் அரசராயிருக்கும் வரை எத்தனைபேர் புண்பட்டார்கள் என்பது பற்றி அக்கறை கொள்ள வில்லை. ஒரு மகனின் [அப்சலோமின்] இருதயத்தில் இருந்த வெறுப்பு மற்றும் கசப்பின் காரணமாக இருபதினாயிரம் பேர் மடிந்து விழுந்தார்கள்.*

*இந்த யுத்தத்தின் பெரும்பகுதி எப்பிராயீமின் அடர்ந்த காடுகளில் நடத்தப்பட்டது.[46] யுத்தத்தின் போது "அப்சலோம் கோவேறு கழுதையின் மேல் ஏறிவரும்போது, அந்தக் கோவேறுக் கழுதை சன்னல் பின்னலான ஒரு பெரிய கர்வாலி மரத்தின் கீழ் வந்தது, அவனுடைய தலை கர்வாலி மரத்தில் மாட்டிக் கொண்டது" (18:9அ). அப்சலோமின் அடர்ந்த முடி கிளைகளில் சிக்கிக் கொண்டதா அல்லது அவரது தலை மரத்தின் கவை ஒன்றில் சிக்கிக் கொண்டுவிட்டதா என்று எனக்குத் தெரியவில்லை. ஆயினும் ஏதோ ஒரு வகையில், அவரது முடி சிக்கிக் கொண்டுவிட்டது (இல்லையென்றால், அவர் பிடி தளர்த்தியிருக்க முடியும்).[47] கடைசியில் அப்சலோம் என்ற மனிதரின் பெருமைக்குக் காரணமாயிருந்த அவரது அழகிய முடியே அவரது வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று. "அவன் வானத்துக்கும் பூமிக்கும் நடுவே தொங்கினான்; அவன் ஏறியிருந்த கோவேறு கழுதை அப்பாலே போயிற்று" (18:9ஆ). அவர் முன்னும் பின்னுமாக ஊசலாடிக் கொண்டிருந்தார், அவரது கைகள் சீற்றமிக்க வெறியுடன் கிளைகளை முறிக்கவும், அவற்றின் மரணப்பிடியைத் தளர்த்தவும் முயற்சி செய்தன.[48]*

*போர் வீரர் ஒருவர் அப்சலோமின் பரிதாபமான நிலையை யோவாபுக்கு அறிவித்தார். யோவாப், "பின்னே ஏன் அவனை அங்கே வெட்டி, தரையிலே தள்ளிப்போடவில்லை?" (18:11) என்று சத்தம் போட்டார். அம்மனிதர் தம் தலையை [எதிர்மறையாக] அசைத்தார். "'பிள்ளையாண்டானாகிய அப்சலோமை நீங்கள் அவரவர் காப்பாற்றுங்கள்' என்று ராஜா உமக்கும் அபிசாய்க்கும், ஈத்தாய்க்கும் எங்கள் காதுகள் கேட்கக் கட்டளையிட்டாரே" (18:12).*

*யோவாப் உக்கிர கோபம் நிறைந்தவராக, அப்சலோம் இருந்த இடத்திற்கு விரைந்தார். தாவீது பத்சேபாளுடன் செய்த இழிசெயல் நடந்ததற்கு முன்னால், அரசரிடமிருந்து வரும் நேரடியான கட்டளை யொன்றுக்குக் கீழ்ப்படியாமல் இருப்பது பற்றி யோவாப் நினைத்துக் கூடப் பார்த்திருக்க மாட்டார். ஆயினும் இப்பொழுது, அந்தத் தளபதி தயங்கவில்லை. அவர் மூன்று வல்லயங்களை அந்த இளைஞரின் நெஞ்சில் குத்தினான்.[49] பின்பு யோவாபின் பத்து ஆயுததாரிகள் தங்கள் தங்கள் ஈட்டிகளை அப்சலோமின் மரண நடுக்கம் கொண்டிருந்த உடலில் சொருகினார்கள், அவரது உடல் ஒரு மனித உடல் என்பதை விட மாபெரும்*

*குண்டூசிகளைக் குத்தி வைக்கும் சிறுமெத்தை போல் காணப்பட்ட நிலையில் விட்டுச் சென்றார்கள்.*

*அப்சலோமே, நான் உமக்குக் கூறியதை நீர் கேட்டீரா? நீர் உம் தந்தைக்கு எதிராக வன்முறையைத் திட்டமிட்டபோது, என்ன நேரிடும் என்பதை எதிர்பார்த்திருந்தீரா? ''மனிதன் எதை விதைக்கின்றானோ அதையே அறுப்பான்.''*

*செய்தியாளர்கள் யுத்தத்தின் செய்தியைத் தாவீதுக்குக் கொண்டு வந்தார்கள். அவர், "யார் வெற்றி பெற்றார்? யார் தோல்வியுற்றார்?" என்று கேட்கவில்லை. அதற்குப் பதிலாக, அவர் அங்கு வந்து சேர்ந்த முதல் மனிதரிடத்தில், ''பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக் கிறானா?" (18:29) என்றுதான் கேட்டார். இரண்டாவது செய்தியாளர் வந்து சேர்ந்தபோது, தாவீது மீண்டும் "பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா?" (18:32அ) என்றுதான் கேட்டார். இரண்டாவது செய்தியாளர், ''அந்தப் பிள்ளையாண்டானுக்கு நடந்ததுபோல, ராஜாவாகிய என் ஆண்டவனுடைய சத்துருக்களுக்கும், பொல்லாப்புச் செய்ய உமக்கு விரோதமாய் எழும்புகிற யாவருக்கும் நடக்கக்கடவது" (18:32ஆ) என்று பதில் அளித்தார். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், "உம் மகன் இறந்து போனார்."*

*அது, அப்சலோமின் நெஞ்சைப் பிளந்த ஈட்டிகள் தாவீதின் நெஞ்சைப் பிளந்தது போலாயிற்று. இதன் பின்பு நாம் வேத வசனங்களில் மிகவும் கவலைக்குரிய வார்த்தைகளில் சிலவற்றைக் காண்கிறோம், இவைகள் மனச்சான்றுள்ள எந்த ஒரு தந்தையையும் அவதிப்படுத்தும்:*

> *அப்பொழுது ராஜா மிகவும் கலங்கி, கெவுனி வாசலின் மேல் வீட்டிற்குள் ஏறிப்போய் அழுதான்; அவன் ஏறிப் போகையில்: "என் மகனாகிய அப்சலோமே, என் மகனே, என் மகனாகிய அப்சலோமே, நான் உனக்குப் பதிலாகச் செத்தேனானால் நலமாயிருக்கும்; அப்சலோமே, என் மகனே, என் மகனே," என்று சொல்லி அழுதான் (18:33).*

*தந்தையர்களே, உங்கள் பிள்ளைகளுக்காக நீங்கள் நேரம் எடுத்துக் கொள்ளவில்லையென்றால், நீங்கள் இருக்க வேண்டிய முறைமையின் படியான மக்களாய் இராது போனால், நீங்கள் உங்கள் மகன்கள் மற்றும் மகள்கள் ஆகியோருக்கு என்ன செய்கின்றீர்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? இருதயங்களில் உங்கள் பெற்றோருக்கு எதிராகக் கசப் புணர்வைக் கொண்டிருக்கின்ற பிள்ளைகளே, நீங்கள் இன்னமும் உங்கள் செய்கைகளுக்குப் பொறுப்பாளியாக இருக்கின்றீர்கள் என்பதை - மற்றும் நீங்கள் உங்கள் பெற்றோர்களின் இதயங்களைக் கிழிக்கின்றீர்கள் என்பதை - நீங்கள் உணர்ந்து அறிகின்றீர்களா?*

*இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே காரியங்கள் நிலைவரப்படும். அப்சலோம் எனது வலது புறம் இருக்கின்றார், தாவீது எனது இடது புறம் இருக்கின்றார்.[50] இவர்கள் பவுலின் உணர்வை எதிரொலிப்பதைக் கவனித்துக் கேளுங்கள்: ''மனுஷன் எதை விதைக்*

*கின்றானோ, அதையே அறுப்பான்" - மன்னிப்பு என்பது ஈடுகொடுத்து நிற்பதில்லை.*

## *முடிவுரை*

*நம்மில் எவரும் பரிபூரணப்பட்டவர்கள் அல்ல என்பதை நான் அறிந்திருக்கின்றேன். நாம் நம்மால் இயன்ற அளவுக்கு மிகச் சிறப்பாகச் செயல்பட்டாலும், அப்பொழுதும் கூட நாம் பாவம் செய்கிறோம் என்பதை [யும்] நான் அறிந்திருக்கிறேன். இன்னமும் நாம் தேவனுடைய உதவியுடன், சோதனையில் இருந்து இயன்ற அளவுக்குத் தூரமாக இருக்கவும் - நமது ஆத்துமாக்களில் இருந்து பாவத்தை வேருடன் அறுத் தெறியவும் முயற்சி செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. கலாத்தியர் 6:7, 8ன் செய்தியை உங்கள் இருதயத்திற்கு எடுத்துச் செல்லுங்கள். தாவீதின் பாவம் மற்றும் அதன் விளைவுகள் ஆகியவற்றின் செய்தியை உங்கள் இருதயத்திற்கு எடுத்துச் செல்லுங்கள். பாவம் உங்கள் வாழ்வை அழிக்கும். இது நீங்கள் நேசிப்பவரை உங்களுக்கு அந்நியராக்கும். இது உங்கள் வாழ்வில் மிகவும் விலை உயர்ந்த, அழகுமிக்க விஷயங்களை அழித்துப் போடும். தேவனே, எங்கள் யாவருக்கும் - பெற்றோர்களோ அல்லது பிள்ளைகளோ யாராயிருப்பினும் - நாங்கள் இருக்க வேண்டிய பிரகாரம் இருக்க எங்களுக்கு உதவும்!*

*இந்தப் பாடத்தை நான் முடிக்கையில், நான் வற்புறுத்தி கூறுவது நமது பாவங்களின் விளைவுகள் எல்லாவற்றையும் நம்மால் எடுத்துப் போட முடியாவிட்டாலும், தேவன் குற்ற உணர்வை நீக்குவார், பின்பு அவர் - நாம் நம்மையே தாழ்த்தி அவரிடமாய்த் திரும்பினால் - நமக்கு அந்த விளைவுகளைத் தாங்கக் கூடிய பெலத்தைத் தருவார். உங்கள் வாழ்வில் உங்களுக்கு தேவை ஒன்று இருந்தால், இன்றே என்பதை விட விரைவாக அதைப் பற்றி நீங்கள் அக்கறை கொள்ள இயலாது. இனியும் தாமதித்து அதைச் செய்யத் துணியாதீர்கள். அதைக் குறித்து இன்றே அக்கறை செலுத்துங்கள்.*

---

## *பிரசங்கக் குறிப்புகள்*

*இந்தப் பாடம் தந்தையர்களை நோக்கிச் சாய்க்கப்பட்டுள்ளது. நீங்கள் இந்தப் பாடத்தை, கலகம் கொண்ட ஆவியின் விளைவுகளைக் காண்பிப் பதற்காக இளம் மக்களை நோக்கிச் சாய்க்க விரும்பலாம். அப்சலோமை குறித்து ''ஒரு கலகக்கார வாலிபன்'' என்ற ஒரு பக்கம் கொண்ட வரைக்குறிப்பை வைத்திருக்கிறேன், இன்றைக்கான சத்தியம் ஜுன் 1993, 21.*

*தாவீதின் வாழ்வு, "தந்தையர்கள் செய்கின்ற தவறுகள்" என்பது பற்றிப் பிரசங்கம் செய்யப் பயன்படுத்தப்பட முடியும். வில்லியம் எஸ். பனோவ்ஸ்கி அவர்கள் எழுதிய "தவறிப் போன மூன்று தந்தையர்கள்" என்ற*

*இதயத்தை அசைக்கும் பிரசங்கம் இதற்கு ஒரு நல்ல ஆதாரவளமாக உள்ளது.* (The Now Generation [Austin, Tex.: Sweet Publishing Co., 1969], 33-45).

*தாவீதை அகித்தோப்பேல் காட்டிக்கொடுத்த நிகழ்ச்சியானது, சங்கீதம் 41:9 மற்றும் சங்கீதம் 55:12-14லிலுள்ள தாவீதின் வசனங்களைத் தூண்டியிருக்க வேண்டும். "ஒரு நண்பர் நம்மைக் காட்டிக் கொடுக்கும் போது'' என்ற தலைப்பில் ஒரு பாடத்திற்கு இவை அடிப்படையாய் இருக்கக்கூடும்.*

*சங்கீதங்களுக்கு முன்னால் உள்ள குறிப்புகளின்படி, சங்கீதம் 3, "தாவீது தன் குமாரன் அப்சலோமுக்குத் தப்பி ஓடிப்போகையில் பாடின சங்கீதம்" என்பதாக உள்ளது. இது இந்தப் பாடத்துடனோ அல்லது அடுத்த பாடத்துடனோ நன்கு ஒத்துச் செல்ல முடியும். சங்கீதம் 4ம் அநேகமாக சங்கீதம் 3உடன் தொடர்புடையதாகவே உள்ளது (சங்கீதம் 3 "காலை ஜெபமாக" உள்ளது; சங்கீதம் 4 "மாலை ஜெபமாக" உள்ளது).*

---

*குறிப்புகள்*

[1]KJV *மொழிபெயர்ப்பு "அழகிய" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றது, இது நேரடியான மொழிபெயர்ப்பாக உள்ளது. ஆங்கிலமொழியில் இன்று நாம்* "beautiful" *என்ற வார்த்தையை பெண்களைக் குறிப்பதற்கும்,* "handsome" *என்ற வார்த்தையை ஆண்களைக் குறிப்பதற்கும் பயன்படுத்துவதால், நவீன மொழி பெயர்ப்புகளில் பல, இந்தப் பிந்திய வார்த்தையையே இவ்விடத்தில் பயன் படுத்துகின்றன.* [2]*ஒருவேளை நீங்கள் ஒன்றரை கிலோவிலிருந்து இரண்டேகால் கிலோ வரையிலான எடைகொண்ட சில பொருட்களை கண்டறியக் கூடும் அதை உங்கள் கைகளில் தூக்கி, ''இது கனமாக உள்ளது'' என்று கூறலாம். நான் பிரசங்கிக்கையில், அப்படிப்பட்ட ஒரு பையை என் வழுக்கைத் தலையின் மீது வைத்து, "இது கனமாக உள்ளது" என்பதுடன், "நான் எடையில்லாமல் இருக்கப் பழகியுள்ளேன்'' என்று சேர்த்துக் கூறுவதுண்டு.* [3]*மறுமனையாட்டி என்பவள் மனையாட்டி அல்ல. மறுமனையாட்டி என்பவள் தனது கணவருடன் திருமணம் செய்விக்கப்பட்டு, சட்டபூர்வமான அந்தஸ்தைப் பெற்றவளாயிருந்தாள், ஆனாலும் அது மனைவியின் அந்தஸ்தை விடக் குறைவான தாகவே இருந்தது. அவள் ஒரு "இரண்டாந்தர மனைவி" என்று நினைக்கப் பட்டிருக்கலாம்.* [4]*2 சாமுவேல் 15:16. அவனுக்கு மற்றவர்களும் இருந்தார்கள் (2 சாமு. 19:5).* [5]*''தாமார்'' என்றால், ''உள்ளங்கை'' என்று அர்த்தப்படுகின்றது.* [6]*அழகனான அப்சலோமும் சவுந்தரவதியான தாமாரும் தெருவில் நடந்து செல்லுகையில் ஒவ்வொரு தலையும் அவர்களை நோக்கித் திரும்புவதை நீங்கள் அறியவில்லையா?* [7]*நீங்கள் யாரையேனு ம் நேசித்தால், அவர்களை நீங்கள், அம்னோன் தாமாரை நடத்தின வகையில் நடத்த மாட்டீர்கள். நேசமும் மதிப்பும் பிரிக்கப்பட முடியாதவைகளாக உள்ளன.* [8]*தாமாருக்கு ஒரு கணவரைக் கண்டறிவதற்கு, அவள் கன்னித்தன்மையுடன் இருக்கின்றாள், "சேதமடையாதவளாக இருக்கின்றாள்" என்று அரசர் உத்தரவாதம் கொடுத்தாக வேண்டும்.* [9]*யோனதாப், தாவீதின் சகோதரரான ''சிமியாவின் மகனாயிருந்தார்" (2 சாமு. 13:3; 1 சாமு. 16:9ஐயும் காணவும்); அதாவது யோனதாப், தாவீதின் சகோதரன் மகனாகவும் அம்னோனின் ஒன்றுவிட்ட சகோதரராகவும் இருந்தார்.* [10]*இது, "கர்த்தருக்குள் அவனது தாவீதின் கையைத் திடப்படுத்தின"*

யோனத் தானுடைய நிலைக்கு எவ்வளவு நேரெதிரானதாக உள்ளது! ஒரு தவறான நண்பர், நீங்கள் விரும்புவதைப் பெறுவதற்கு உங்களுக்கு உதவலாம், ஆனால் அவர் உங்களுக்கு மிகச் சிறந்தது எது என்பதைக் குறித்து அக்கறை கொள்ளுவதில்லை.

[11]இளவரசியொருத்திச் சமைப்பது எப்படி என்பது தெரிந்திருந்தது எனக்கு ஆர்வமுள்ள விஷயமாக உள்ளது. அவளது வாழ்வில் இது போன்ற விஷயங்கள் வேலைக்காரிகள் செய்யும் பணியாக இருந்தாலும் அவள் இதைக் கற்றுக் கொண்டிருந்தது உண்மையிலேயே பாராட்டப்படக் கூடிய விஷயமாகும். யூதர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அடிப்படைத் திறன்களைக் கற்பிப்பதில் அதிக நம்பிக்கை உடையவர்களாய் இருந்தார்கள். [12]தாமாரின் முதல் விவாதம் மிகவும் பலம் வாய்ந்ததாக இருந்தது: "நீ முன்மொழியும் செயல் - தேவனுக்கு முன்பாகவும் மனிதருக்கு முன்பாகவும் - தவறானது." அவளது அடுத்த இரண்டு விவாதங்களும் பலமானதாகவே இருந்தன: "அது என்னையும் ஒருவேளை உன்னையும் கூட சேதப்படுத்தும்." தாவீது தன்னை அம்னோனுக்கு மனைவியாக கொடுப்பார் என்ற அவளது கடைசி விவாதக் கருத்து அவ்வளவு பலம் வாய்ந்ததல்ல, ஏனெனில் அப்படிப்பட்ட விஷயம் நியாயப் பிரமாணத்தினால் தடை செய்யப்பட்டிருந்தது (லேவி. 18:9, 11; 20:17; உபா. 27:22). இந்த வரிசைத் தொடரானது, காரணத்தைக் கவனிக்காத மனிதனுக்கெதிராக வாதிடும் ஒரு பெண் தனது வாதத்திற்கான கருத்துக்களை இழந்து போவதை சுட்டிக்காண்பிக்கின்றது. இவற்றில் முதல் கருத்தைப் பற்றி, தேவனுடைய மக்கள் மற்றவர்களைக் காட்டிலும் உயர்வான தராதரங்களைக் கொண்டிருக்க வேண்டியதைக் கவனியுங்கள்: "இஸ்ரவேலிலே இப்படிச் செய்யத் தகாது" (13:12). இது அநேகமாக அவர்களைச் சுற்றிலுமிருந்த புறதெய்வ வணக்கத்தார்களால் செய்யப்பட்டிருக்கலாம். [13]NASB யில் "நீண்ட கையுள்ள மேலுடை" என்றுள்ளது, அத்துடன் பின்வரும் அடிக்குறிப்பும் உள்ளது: "நேர்ப்பொருளில் பலவர்ணமான வஸ்திரம்." இது அழகுமிக்க கைப்பின்னல் வேலை கொண்டிருந்திருக்கலாம். NIV யில் அநேகமாக மிகவும் சரியான வகையில் இதன் பொருள் தரவமைக்கப்பட்டுள்ளது எனலாம்: "வளமாக அலங்கரிக்கப்பட்ட மேலுடை." [14]அவள் தன் தலையின்மேல் சாம்பலை வாரிப் போட்டுக் கொண்டும் (2 சாமு. 13:19) தன் கையைத் தன் தலையின் மேல் வைத்துக் கொண்டும் சென்றாள் (வ. 19; எரே. 2:37ஐக் காணவும்), இவையிரண்டும் துக்கத்தின் அடையாளங்களாகும். [15]செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பு மற்றும் பல மொழிபெயர்ப்புகளும் 2 சாமுவேல் 13:21ன் முடிவில் பின்வருவதைச் சேர்த்துக் குறிப்பிடுகின்றன: "அவன் தனது குமாரனாகிய அம்னோனின் ஆவியைத் துக்கப்படுத்தவில்லை, ஏனெனில் அவனை இவன் அன்புகூர்ந்தான், ஏனெனில் அவன் இவனுக்கு முதற்பிறந்தவனா யிருந்தான்" (NEB ஐக் காணவும்). [16]இது எவ்விடத்தில் அமைந்திருந்தது என்று மிகச் சரியாகத் தெரியவில்லை. இது எருசலேமிலிருந்து வடக்கில் சுமார் பன்னிரெண்டு மைல்கள் தொலைவில் இருந்ததாகச் சிலர் நினைக்கின்றார்கள். [17]1 சாமுவேல் 25ல் நாபால்-தாவீது ஆகியோரின் வரலாற்றை நினைத்துப் பாருங்கள். [18]செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பு மற்றும் பல மொழிபெயர்ப்புகளும் 2 சாமுவேல் 13:27 முடிவில் பின்வருவதைச் சேர்த்துக் குறிப்பிடுகின்றன: "அப்சலோம் அரசவிருந்துக்கு ஒப்பான ஒரு விருந்தை ஆயத்தம் செய்தான்" (ஹிசியஐக் காண்க). [19]NASB யில் "வேண்டிக் கொண்டான்" என்றுள்ளது, அத்துடன் பின்வரும் அடிக்குறிப்பும் உள்ளது: "நேரடியான அர்த்தத்தில், முற்றிலுமாக ன்இருதயத்தைதி உடைத்தான்." அப்சலோம் தாவீதின் தற்பாதுகாப்பு எல்லாவற்றையும் உடைத்தார். [20]அவர்கள் தங்கள் கோவேறுக் கழுதைகளில் ஏறி ஓடிப்போனார்கள். இது தாவீதின் அரசாட்சியில் ராஜகுடும்பத்தினர் செல்லும் பொதுவான வாகனமா யிருந்தது (2 சாமு. 18:9; 1 இரா. 1:33, 38, 44).

*[21]2 சாமுவேல் 13:37ஆ, "தாவீது தினந்தோறும் தன் குமாரனுக்காகத் துக்கித்துக் கொண்டிருந்தான்" என்று கூறுகிறது. "குமாரன்" என்பது அநேகமாக அம்னோனைக் குறிப்பதாயிருக்கலாம் (வ. 39ன் தொடக்கப் பகுதியைக் கவனிக்கவும்). [22]கேசூர் என்பது இஸ்ரவேலுக்கும் சீரியாவுக்கும் இடையில் இருந்த நடுநிலை நாடாயிருந்தது, இது கீலேயாத்துக்கு வடக்கில் இருந்தது (2 சாமு. 3:3; 15:8). ஆயினும் இது தாவீது ஆளுகை செய்த எல்லைப் பகுதியிலேதான் இருந்தது. தாவீது தம் மகனைத் தேடிக் கண்டுபிடித்து மீண்டும் எருசலேமுக்குக் கொண்டுவந்து, அவரை தண்டித்தல் அல்லது எது வேண்டுமானாலும் செய்தலை தடை செய்யக் கூடிய விஷயம் ஏதொன்றும் இருப்பதில்லை. [23]அப்சலோம் மூன்றாவதாகப் பிறந்தவராயிருந்தார், ஆனால் இரண்டாவதாகப் பிறந்த கீலேயாப் (2 சாமு. 3:3) அல்லது தானியேல் (1 நாளா. 3:1) என்பவரைப் பற்றிக் கூடுதலாகக் குறிப்பெதுவும் இல்லாததால், அவருக்கு ஏதாகிலும் நடந்திருக்கும் என்று பலர் நினைக்கின்றார்கள் (ஒருவேளை அவர் பிறப்பிலேயே இறந்திருக்கலாம்), இது அப்சலோமுக்கு, அரசருக்கு உயிருடன் உள்ள மக்களில் முதலாமவர் என்ற இடத்தைத் தருகின்றது. [24]இதைச் செய்ததில் யோவாப் தமது எல்லைகளை மீறி அடியெடுத்து வைத்தார். அவர் உரியாவின் மரணத்தைத் தாவீதின்மேல் சுமத்தி விட முடியும் என்றாலும் விளைவு சாதகமாக வரும் வரை பதட்டத்துடன் இருந்தார் என்பது உறுதி. 2 சாமுவேல் 14:22ல் அவரது மனநிம்மதியைக் கவனியுங்கள். [25]இந்தப் பெண், பெத்லகேமுக்குத் தெற்கே சில மைல்கள் தொலைவில் இருந்த தெக்கோவாவில் இருந்து வந்தாள் (ஆமோஸ் 1:1ஐக் கவனிக்கவும்). [26]இது நாத்தானின் பெண்ணாட்டுக் குட்டியின் கதையை விடச் சிக்கலான கதையாக உள்ளது. இது ஒரு புறத்தில், "கண்ணுக்கு கண்" என்ற பிரமாணச் சட்டத்தை உள்ளடக்கியதாகவும், ஆனால் மறுபுறத்தில், நாடானது அதைத் தொடக்கத்தில் சுதந்தரித்துக் கொண்டவர்களின் வாரிசுகளால் தொடர்ந்த உரிமை கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்ற தேவனுடைய விருப்பத்தை உள்ளடக்கிய தாகவும் இருந்தது. குடும்பத்தில் எஞ்சியிருந்தவர்கள் நீதியை நிலைநாட்டுவதைக் காட்டிலும் உடமையைக் கைப்பற்றுவதிலேயே அதிகம் ஆர்வமாய் இருந்தார்கள் என்று அந்தப் பெண் மறைமுகமாய்க் குறிப்பிட்டாள். சுதந்தரத்தை (காணியாட்சியை)க் காத்துக் கொள்வதற்கு, எஞ்சியுள்ள ஒரே வாரிசான தனது மகன் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே அவளுடைய கருத்தாயிருந்தது. தாவீதும் இஸ்ரவேலின் அரியணைக்கு உரிமையுள்ள வாரிசான அப்சலோமை மன்னித்து ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது இதில் மறைந்துள்ள கருத்தாயிருந்தது. 2 சாமுவேல் 14:14ன் முடிவுப் பகுதியில் உள்ள அவளது கூற்றானது, தேவனுடைய மிக முக்கியமான பண்பாக உள்ளது இரக்கமே என்பதற்கு உறுதிப்பாடாக உள்ளது. [27]தாவீதின் விருப்பத் தேர்வுகளை அப்சலோம் புரிந்து கொண்டிருந்தார் (2 சாமு. 14:32). [28]அமெரிக்காவில் தொழில்முறை விளையாட்டு வீரர்கள் பயன்படுத்தப்படாத நிலையில் இருக்கும்போது சிலவேளைகளில் "Play me or trade me!" என்ற இந்தத் தந்திரத்தைப் பயன்படுத்துவதுண்டு. [29]யோவாப், தாம் ஏற்கனவே அவரின் ன்அப்சலோமின்தி அதிர்ஷ்டத்தை வெகு தூரம் முன்னேற்றிவிட்டதாக நினைத்து இருக்கலாம். [30]கவனத்தைக் கவருவதற்காக மோசமான செயல்களைச் செய்கின்ற பிள்ளைகளை எனக்குத் தெரியும்; அநேகமாக நீங்களும் கூட அப்படிப்பட்ட வர்களை அறிந்திருக்கலாம்.*

*[31]2 சாமுவேல் 15:6, 12. தாவீது தமது நாட்டிற்குச் செய்த எல்லாவற்றையும் ஒருவர் ஆழ்ந்து சிந்திக்கும்போது ("உள்ளவற்றை இழக்கமால் உச்சத்தை அடைவது எப்படி'' என்ற பாடத்தைக் காணவும்), அப்சலோமுக்கு இதைச் செய்யச் சாத்தியமானது மிகவும் திகைப்புக்குரியதாயிருக்கின்றது. தாவீது பத்சேபாளிடம்*

*பாவத்திற்கு உட்படுமுன்பு இருந்த தாவீதாக அதற்குப் பின் இல்லாது போனார் என்பதே ஒருவர் செய்யக் கூடிய ஒரே முடிவாக உள்ளது. [32]2 சாமுவேல் 15:7ல் ''நாற்பது வருஷம்'' என்றுள்ளது, ஆனால் சில பழங்கால பதிப்புகளும் யோசிப்பாசின் புத்தகமும் இவ்விடத்தில் "நான்கு" என்றே குறிப்பிடு கின்றன. இதுவே மிகவும் சரியான எண்ணிக்கையாக இருக்கலாம் (NASB யின் அடிக்குறிப்பையும் NIV யையும் காணவும்). ஆயினும் சிலர், இந்த நாற்பது வருஷம் என்பது சாமுவேல் தாவீதை அபிஷேகம் செய்வித்திருந்து நாற்பது வருஷங்கள் ஆகியிருந்தன என்பது தவிர, வேறு குறிப்புக் கொண்டிருப்பதில்லை என்று கருதுகின்றார்கள். [33]பதிவேட்டில் உள்ளபடி, அப்சலோம்தான் ராஜகுடும்பத்தில் இரதங்களையும் குதிரைகளையும் பயன்படுத்திய முதல் நபராக இருந்தார். இது நடக்கும் என்று சாமுவேல் எச்சரிக்கை செய்திருந்தார் (1 சாமு. 8:11). [34]2 சாமுவேல் 18:18. இதற்கு முன் சவுலும் இதே செயலைச் செய்திருந்தார் (1 சாமு. 15:12). ராஜாவின் பள்ளத்தாக்கு என்பது எங்கிருந்தது என்று நமக்குத் தெரியவில்லை. இது அநேகமாக எருசலேமுக்கு அருகாமையில் இருந்திருக்கலாம். [35]தமது பெயரைப் பாதுகாப்பதே இதன் நோக்கம் என்று அப்சலோம் கூறினார். ஆயினும், இதை அவர் தமது வாழ்நாள் காலத்திலேயே செய்தார், விளம்பரம் என்பதே இதன் உடனடி விளைவாயிருந்தது. இது ஒரு விளம்பரப் பலகை வைப்பதற்கான பழங்காலச் சமச் செயலாக இருக்கும். "எனக்குக் குமாரன் இல்லை" (2 சாமு. 18:18) என்ற வசனத்தைக் கவனிக்கவும்; இதற்கு முன்பே அப்சலோமின் மகன்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன (2 சாமு. 14:27); அவர்கள் யாவரும் பிறப்பிலேயோ அல்லது அதன் பின் விரைவிலேயோ இறந்து போயிருப்பார்கள். [36]அப்சலோமின் நடவடிக்கைகளில் சிலவற்றையாவது தாவீது அறியாம லிருத்தல் என்பது கடினமாயிருந்திருக்கும் … ஆனால் மீண்டுமாக, தாவீது ஏதொன்றும் செய்யாதிருந்தார். [37]தேவாலயம் கட்டியெழுப்பப்படும் வரைக்கும் "உயரமான இடங்களில்" பலி செலுத்துதல் என்பது அனுமதிக்கப்பட்டிருந்தது. அப்சலோம் எப்ரோனில் பிறந்தார் என்பதால், அவர் அங்கு சென்று பலிசெலுத்துதல் என்பது தர்க்கரீதியாக ஏற்புடைய செயலாக ஒலித்தது. [38]அப்சலோம், தமது உண்மையான நோக்கங்களை மறைப்பதற்குத் தேவபக்தியின் வேஷம் தரித்த முதலாவது நபராகவோ அல்லது கடைசி நபராகவோ இருந்ததில்லை. அவர் எப்ரோனுக்கு வந்துசேர்ந்த பின்பு, சூழ்ச்சியானது வளர்ந்த நிலையிலும் கூட அவர் தமது புதிரான செயல்களைத் தொடர்ந்து செய்தார் (2 சாமு. 15:12). [39]இதற்கு முன்பே அப்சலோம் பயணம் குறித்த தமது நோக்கம் பற்றிப் பொய்யுரைத்திருந்தார் (2 சாமு. 13:23-27) ஆனால் தாவீது அதை நினைவில் வைத்திருந்ததாகக் காணப்படவில்லை. [40]இது நடைபெற வேண்டும் என்று 2 சாமுவேல் 15:10 கூறுகின்றது; இது நடைபெற்றதாக வசனம் 13 மறைமுகமாக உணர்த்துகின்றது. 2 சாமுவேல் 19:10, அவர்கள் அப்சலோமை அரசராக "அபிஷேகம்" பண்ணினார்கள் என்று கூறுகிறது எனவே முடிசூட்டப்படும் வைபவம் ஏதோ ஒன்று நடந்தது என்பது உறுதி.*

*[41]2 சாமுவேல் 15:12. இவ்விடத்தில்தான் நாம் முதன் முதலாக அகிதோப் பேலைப் பற்றி வாசிக்கின்றோம், ஆனால் தாவீது இவரது ஆலோசனையை கேள்விக்கிடமின்றி நம்பியிருந்தார் (வ. 31). அகிதோப்பேல், பத்சேபாளின் தாத்தாவாயிருந்தார் என்பது உறுதி (2 சாமு. 11:3ஐயும் 23:34ஐயும் ஒன்றா யிணைத்துக் காணவும்). ஒருவேளை அகிதோப்பேல், தாவீது பத்சேபாளுக்கும் உரியாவுக்கும் செய்திருந்தது குறித்து வெறுப்புணர்வைத் தேக்கி வைத்திருக்கலாம். [42]நகரத்தை விட்டு செல்லுதல் என்ற தாவீதின் முடிவைச் சிலர் ஞானமான இராணுவ செயல்திறன் நடவடிக்கையாகக் காண்கின்றார்கள். ஒருவேளை அப்படியிருக்கலாம், ஆனால் தாவீதின் வாழ்வின் இந்தக் காலகட்டத்தில், தாவீது நேர்மறையான*

*நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு மாறாக நடந்தவற்றிற்குப் பதில்செயல் மாத்திரம் செய்தார் என்ற உண்மை நிலைத்துள்ளது. [43]பிற்பாடு, சேபா ஒரு கலகத்தைத் தொடங்கியபோது, "இஸ்ரவேல் மனுஷரெல்லாரும் ... சேபாவை பின்பற்றிப் போனார்கள்", ன்ஆயினும்தி தாவீது நகரத்தை விட்டுத் தப்பி ஓடவில்லை (2 சாமு. 20:2). [44]இது, "உம்முடைய தகப்பனுக்கு நாற்றமாய்ப் போனீர் என்பதை இஸ்ரவேல் எல்லாரும் கேள்விப்பட்டு" என்ற வார்த்தைகளுக்குப் பின்னால் உள்ள கருத்தாக இருக்கின்றது. ஒருவேளை சிலர், அப்சலோம் தமது தந்தையுடன் (இதற்கு முன் செய்தது போல) ஒப்புரவாகக் கூடுமென்று பயந்திருக்கலாம்; அதன் பின்பு அவர்கள் சூழ்ச்சியில் பங்கு கொண்டமைக்காகத் தண்டிக்கப்படலாம். அப்சலோம், தாவீதின் மறுமனையாட்டிகளிடத்தில் பிரவேசித்ததின் மூலமாக, இனி ஒப்புரவாகுதல் இராது என்பதைக் காண்பித்தார். [45]அப்சலோமின் செயல்களுக்கு அரசியல் ரீதியான முன்மாதிரி இருந்திருக்க லாம், ஆனால் அவர் செய்தது நியாயப்பிரமாணத்திற்கு எதிரானதாக இருந்தது (லேவி. 18:7, 8; 20:11). [46]"தேவனுடைய சிட்சையை சாந்தமாய் ஏற்றுக் கொள்ளுதல்" என்ற பாடத்தில் "எப்பிராயீமின் வனாந்தரம்" என்ற சொற்றொடருக்கான குறிப்பைக் காணவும். [47]அப்சலோமின் முடி கிளைகளில் சிக்கிக் கொண்டது எவ்வாறு என்பதைப் பற்றி யோசிப்பாஸ் அவர்கள் ஒரு உருவகப் பத்தியை எழுதியுள்ளார். [48]அவரது தலை மரக்கிளையின் கவையொன்றில் அகப்பட்டுக் கொண்டபோது அவர் தமது உணர்வை இழந்தார் என்றும், இவ்விதமாக அவர் தம்மை விடுவித்துக் கொள்ள முயற்சி எதுவும் செய்யாதிருந்தார் என்றும் கருத்துக் கூறப்படுகின்றது. [49]"நெஞ்சு" என்பது (2 சாமு. 18:14) இரத்தத்தை பீய்ச்சக் கூடிய சதைப் பகுதி யிலான உறுப்பைக் குறிப்பதில்லை, ஆனால் அது அப்சலோமின் உடலின் ''மையப் பகுதியை''க் குறிப்பதாயிருக்கலாம். பாதிக்கப்பட்டவரின் வயிற்றில் ஈட்டி செருகப் பட்ட பல உதாரணங்களை நாம் கண்டிருக்கின்றோம். [50]உங்களின் இருபுறமும் அப்சலோமும் தாவீதும் நிற்பதாகப் பாவனை செய்து, இதை உங்கள் ஒவ்வொரு கரத்தையும் அசைப்பதால் சுட்டிக் காண்பியுங்கள்.*